Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 பங்குனி 30 திங்கட்கிழமை (13.04.2015) பக்கங்கள் 20 ஓசை – 195

# ஆணைக்குழு மீது சரிகிறது நம்பிக்கை

## ஐ.நா. அதிகாரி சொல்கிறார்



(கொழும்பு)

இலங்கை அரசினால் அமைக கப்பட்டு செயற்பட்டுவரும் பல் வேறு ஆணைக்குழுக்கள் மீது சாதாரண பொது மக்களுக்கும் நம்பிக்கை இல்லை என்றும், மாறாக அவநம்பிக்கையே மேலோங்கியுள்ளது என்றும், உண்மையை ஊக்குவித்தல், நீதி, நல்லிணக்கத்துக்கான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளரான பப்லோ டி கிரெய்ப் இலங்கையில் தனது பயணத்தின் முடிவில் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இவர் கடந்த மார்ச் 30 ஆம் திகதி தொடக்கம், ஏப்ரல் 3 ஆம் திகதி வரை இலங்கையில் பயணம் மேற்கொண்டிருந்தார். பல்வேறு அதிகாரிகளையும்

19 ஆம் பக்கம் பார்க்க

## ஆணைக்குழுவின் சிபார்சுக்கு மைத்திரி பச்சைக் கொடி

(கொழும்பு)

காணாமற்போனோர் தொடர்பான ஆணைக்குழுவின் சிபார்சுகள் சிலவற்றை அமுல்படுத்துவதற்கு ஜனாதிபதி அனுமதி வழங்கியுள்ளார்.

ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட மேற்படி ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையில் காணாமற்போனோர் தொடர்பாக சிபார்சுகள் செய்யப்பட்டிருந்தது.

இந்த ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை இன்னமும் தயார் செய்யப்பட்டவில்லை.



(மேலும் ஒரு செய்தி உள்ளே)

## நிபுணர் குழுவுக்கு மேலும் பல வல்லுநர்கள்

கழிவு ஒயில் விவகாரம்

(யாழ்ப்பாணம்)

'நிலத்தடி நீரில் கழிவு ஒயில் கலந்தமை தொடர்பாக ஆராயும் நிபுணர் குழுவில் மேலும் பல துறைசார்ந்த நிபுணர்களை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க நேற்றைய கலந்துரையாடலில் சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளதென யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கழிவு எண்ணெய் கலப்பது சம்பந்தமான கலந்துரையாடலைத் தொடர்ந்து ஊடகவியலாளர்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த கிணறுகளில் பெறப்பட்ட அறிக்கைகள் சம்பந்தமாக சிங்கப்பூருக்கு அறிக்கைகள் பெறுவதற்காக அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கைகள் வரும் வரைக்கும் தொடர்ந்து குடிநீர் தற்போது வழங்கப்படுவது போன்று தொடர்ந்து குடிநீர் விநியோகம் பொது மக்களுக்கு இடம்பெறும் என யாழ். அரச அதிபர், குறிப்பிட்டுள்ளார்.

## றிசாத் மீண்டும் இணைத் தலைவர்

(முல்லைத்தீவு)

வன்னி மாவட்ட அபிவிருத்தி இணைப்புக்குழுவின் இணைத் தலைவராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய தலைவரும், கைத்தொழில், வணிகத் துறை அமைச்சருமான

19 ஆம் பக்கம் பார்க்க

## கொடிகாமத்தில் விபத்து: குடும்பஸ்தர் மரணம்

(கரணவாய்)

பேருந்து தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டியுடன் ஹயஸ் வாகனம் மோதியதில் முச்சக்கர வண்டிச் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, கொடிகாமம் வீதியில் உள்ள பேருந்து தரிப்பி

19 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் தொகுதி மறுசீரமைப்பை கைவிடக்கோரிக்கை

(கொழும்பு)

இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் வடக்கில் மீண்டும் மீளக்குடியமரும் வரை, வடமாகாணத்தில் அடுத்த 10 வருடங்களுக்கு தேர்தல் தொகுதி மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படக்கூடாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் கோரிக்கை விடுத்துள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்ற வளாகத்தில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவினரும், அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான குழுவினரும் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல உரிய காலஅவகாசம் அளிக்கப்பட வேண்டுமென இதன்போது பிரதமரிடம் கோரிக்கை ஒன்றும் முன்வைக்கப்பட்டுள்ளது.


தற்போது தேர்தல் தொகுதி மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டால், நாடாளுமன்றத்தில் தமிழ்ப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை குறைவடைவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்கள் சொந்த இடங்களுக்கு மீளத் திரும்புவதற்கு ஏதுவாக உயர்பாதுகாப்பு

19 ஆம் பக்கம் பார்க்க

## தேனிலவு அரசியல் முடிவுக்கு வருகிறதா?

### கூட்டமைப்பின் போக்குக்கு கண்டனம்



(யாழ்ப்பாணம்)

தாங்கள் ஆதரவளித்த புதிய அரசுடனான தேனிலவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முடித்துக் கொள்ள ஆரம்பித்துள்ளனர். இது வழமையாக அவர்கள் செய்து வரும் கபட நாடகமாகும். தமக்கு வாக்களித்த மக்களது பிரச்சினைகளைத் தீர்க்காமல், அவற்றைத் தொடர வைப்பதன் ஊடாக தங்களது சுயலாப அரசியல் இருப்பைத் தக்கவைத்துக்கொண்டிருக்கும் கூட்டமைப்பினர், அவர்கள் ஆதரவளித்த புதிய அரசுக்கு எதிரான பிரசாரங்களில் தற்போது ஈடுபட்டுவருவதானது, அடுத்த தேர்தலுக்கு அவர்கள் தயாராகின்றார்கள் என்பதையே காட்டுகின்றது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் இடம் பெற்ற வடக்கு கல்வியாளர்களுடனான சந்திப்பின்போது கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த அவர், தேர்தல் காலங்களில் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி, வாக்குகளை அபகரித்துக் கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், அதில் எந்த வொரு வாக்

19 ஆம் பக்கம் பார்க்க

## சுகாதாரத் தொண்டர்கள் யாழ்.செயலகத்தில் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

தமக்கு நிரந்தர நியமனம் வழங்கவேண்டும் என்று குறிப்பிட்டு யாழ்ப்பாணத்தில் சுகாதாரத் தொண்டர்களாகக் கடமையாற்றிய சிலர், யாழ்.அரச செயலகத்தின் முன் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர். அரச செயலகத்தில் நேற்று யாழ்.குடிதண்ணீர் பிரச்சினை குறித்த முக்கிய கலந்து

19 ஆம் பக்கம் பார்க்க

## பயங்கரவாத தடைச்சட்டம் இப்போதைக்கு அகற்ற முடியாது



பக்.06

## குடிநீரில் மாசு இல்லை என்று கூறமுடியாது





(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கிணறுகளை பயன்படுத்துவதற்கான இறுதி அறிக்கையினை இந்த மாத இறுதிக்குள் வழங்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாக வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் நேற்று தெரிவித்தார்.

சுன்னாகம் கிணறுகளில் கழிவு ஒயில் கலக்கப்பட்டுள்ளதாகவும், அந்த நீரை மக்கள் பயன்படுத்தக்கூடாதென்றும் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ள நிலையில், நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் சுன்னாகம் கிணற்று நீரை பருகுவது தொடர்பிலான விஷேட கலந்துரையாடல் நடைபெற்றது.

19 ஆம் பக்கம் பார்க்க





லைட்டா தொழில் பயிற்சி நிலையத்தின் ACTIVE CITIZEN பயிற்சிகளை பூர்த்தி செய்த மாணவர்களால் அண்மையில் நடாத்தப்பட்ட இரத்ததான நிகழ்வின் போது... (21)

# சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் பன்றித் தலைச்சி அம்பாள் ஆலயத்தின் 5 ஆவது பங்குனித் திங்கள் தினமான இன்று சின்மயா மிஷன் ஷாக்கிரத சைத்தன்ய சுவாமி களின் ஆன்மிக சொற்பொழிவு ஆலய வளாகத்தில் அமைந் துள்ள கனகாம்பிகை அன்னசத் திர மண்டபத்தில் இடம்பெறவுள் ளது.

அதனைத் தொடர்ந்து பகல் 11 மணிக்கு மட்டுவில் தெற்கு ஞானவைரவர் ஆலய பஜ னைக் குழுவின் பஜனையும் இடம்பெறும். (11)

# மருதடி விநாயகருக்கு நாளை தேர்த்திருவிழா

மானிப்பாய் மருதடி விநாய கர் ஆலயத்தின் தேர்த்திரு விழா நாளை இடம்பெறவுள்ளது.

இந்த ஆலயம் புனருத் தானம் செய்யப்பட்டு மஹோற் சவம் நடைபெற்று வருகின்றது. இதில் இன்று திங்கட்கிழமை மாலை 6.30 மணியளவில் சப்பறத் திருவிழா நடைபெற வுள்ளது.

புதுவருடத் தினமான நாளை காலை 9 மணிக்கு வசந்த மண்டபப்பூசைகள் நடைபெற்று 11 மணியளவில் சுவாமி வீதி யுலா வரும் காட்சி இடம்பெறும்.

புதிய தேரின் வெள்ளோட் டம் நேற்றுமுன்தினம் இடம்பெற் றது.

# சீரணி நாகபூசணி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா

சண்டிலிப்பாய் சீரணி நாக பூசணி அம்பாள் ஆலய வரு டாந்தப் பெருந்திருவிழா எதிர் வரும் 17 ஆம் திகதி வெள் ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 18 தினங்கள் திருவிழா சிறப்பாக நடைபெறும.

எதிர்வரும் 17 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு கொடி யேற்றமும் 21 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை மாலை தெப்பத்திரு விழாவும் 22 ஆம் திகதி புதன்கிழமை மாலை கைலாச வாகனத் திருவிழாவும் தொடர்ந்து 29 ஆம் திகதி புதன்கிழமை மாலை மாம்பழத்திருவிழாவும் மே மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை மாலை மஞ் சத்திருவிழாவும், இரண்டாம் திகதி சனிக்கிழமை மாலை சப்பறத் திருவிழாவும் இடம் பெற்று மூன்றாம் திகதி ஞாயிற்றுக் கிழமை இரதோற் சவம் நடைபெறும். நான்காம் திகதி திங்கட்கிழமை கொடி யிறக்கத் திருவிழா இடம்பெறும். (10)

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | திங்கட்கிழமை |
|---|---|
| AM 05.00 | ஆலய தரிசனம் (பக்தி பாடல்கள்) |
| AM 07.00 | காலை கதிர் |
| AM 08.00 | நாளிதழ் நேரம் |
| AM 09.00 | SMS Time (Live) |
| AM 09.58 | காலை செய்தி |
| AM 10.00 | HELLO DD |
| AM 10.30 | புதுயுகம் |
| AM 11.00 | சிரிக்க சிரிக்க |
| AM 11.30 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | வரலாற்று நாயகர்கள் |
| PM 12:30 | தமிழ் பேசு தமிழா |
| PM 01.20 | பாடல்கள் |
| PM 01.30 | நகைச்சுவை திரைப்படம் |
| PM 03.58 | மாலை செய்தி |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 07.30 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.20 | பாடல்கள் |
| PM 08.30 | HELLO DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# நேர்த்தியற்ற அரசியல் தலைமையால்தான் தமிழர் உரிமைகளும் தள்ளாடுகின்றது

## முன்னாள் எம்.பி.குகேந்திரன் தெரிவிப்பு





(யாழ்ப்பாணம்)

வறிய மக்களின் வாழ்வியலை தூக்கிநிறுத்தி அவர்களது எதிர்கால வாழ்வியலை மேம் படுத்துவதற்காக தூரநோக் குடன் நீண்ட காலமாக மக்கள் மத்தியிலிருந்து சேவைகளை செய்து வருபவர்கள் தான் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியினர்.

அத்தகைய ஒரு செயலுரு வின் வடிவமாகத்தான் இப்பகு தியினது மக்களை ஒன்றி ணைத்து வழிநடத்துவத்றகாக கட்டப்பட்டுள்ள இந்த சனசமூக நிலையமாகும். இதற்கான உருவாக்கத்திற்கு பங்களிப்பு செய்தமையானது எமது செய லாளர் நாயகம் டக்ளஸ் தேவா னந்தா வறிய மக்கள் மீது கொண்டுள்ள அக்கறையினையே காட்டி நிற்கின்றது - என முன் னாள் நாடாளுமன்ற உறுப்பி னரும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் யாழ் மாவட்ட ஒருங் கிணைப்பாளருமான கே.வி. குகேநதிரன் (ஜெகன்) தெரி வித்துள்ளார.

சாவகச்சேரி - கச்சாய்; மகிழங்கேணி வீதி கிராமத்து மக்களுக்காக புதிதாக கட்டப் பட்ட திருவள்ளுவர் சனசமூக நிலைய திறப்புவிழா நிகழ்வு நேற்று முன்தினம் நிலையத் தலைவர் இராமநாதன் ஸ்ரீமணி மாறன் தலைமையில் நடை பெற்றது. இந்த விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடத்தை சம்பிரதாய பூர்வமாக நாடாவெட்டி திறந்து வைத்தபின் மக்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் தெரிவித்த தாவது,

தமிழ் மக்களது தலை விதியை யாரால்தான் மாற்ற முடியும். தமிழ் மக்கள் விடுதலை வேண்டும் என போராடுவதற்கு தூண்டுதலாக இருந்தவர்களும் தமிழ் மக்களது கல்விமான் களையும் புத்திஜீவி களையும் தலைசிறந்த தமிழ்த் தலைவர்களையும். கொன்று குவித்தவர்களும் ஒரு அணியி லிருந்து கொண்டு சுயநலத்துக் காக மக்களின் சுமைகளை விற்று அரசியல் பதவிகளை தக்கவைத் துக்கொண்டு தீர்வுகளை தமிழ் மக்கள் எட்டிவிடக்கூடாது என்ப தில் உறுதியாய் இருந்து கொண்டு தமிழரது உரிமைபற்றி பேசுகின் றனர் வெட்கம் கெட்ட கூட்டத் தினர். இவர்களைத்தான் தமிழ் மக்களும் கண்ணை மூடிக் கொண்டு இதுவரை காலமும் நம்பியிருந்தனர்.

தற்போது சந்தர்ப்பவா திகளின் வேஷங்கள் கலையத் தொடங்கியுள்ளது. மக்களும் அவர்களது சந்தர்ப்பவாத அரசி யலை அறிந்துகொண்டு விட்டனர்.

தற்போது 100 நாள் செயற் றிட்டங்கள் நடைபெற்று வரு கின்றது என கூறப்படுவது ஒரு வேடிக்கை நிகழ்வாகத்தான் பார்க்கப்படுகின்றது. 100 நாள் திட்டங்களில் பெரும்பான்மை யான திட்டங்கள் மற்றும் அபி விருத்திகள் ஊடகங்களில் தான் காட்டப்படுகின்றன. மக்களுக்கு கிடைப்பதாக எதுவும் தெரிய வில்லை.

பல தடைகளை தாண்டி திறக்கப்பட்டுள்ள இந்த சன சமூகநிலையத்தின் வளர்ச்சிகள் அனைத்தும் இப்பகுதி மக்களது கரங்களில்தான் உள்ளது. உங்களது ஒற்றுமை மற்றும் நேரான செயற்பாடுகள் மூலம் நிச்சயமாக உங்கள் வாழ் வியலில் மாற்றம் வரும் என நம்புகின்றோம். அதற்காக செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும் எமது கட்சி உறுப்பினர்களும் என்றும் துணை நிற்போம் எனத்தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் மற்றும் ஈ.பி. டி.பி கட்சியின் தென்மராட்சி அமைப்பாளர் சாள்ஸ்.நகராட்சி மன்றச் செயலாளர் சண்முக தாசன் மற்றும் நகரசபை உறுப் பினர்கள், கல்விமான்கள் அப் பகுதி மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# புதுவருட தினத்தன்று இரத்ததான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பொற்பதி இந்து விளையாட் டுக்கழகத்தால் புதுவருட தினத்தை முன்னிட்டு நடாத்தப்படும் இரத் ததான நிகழ்வு இம்முறை 11 ஆவது ஆண்டாக நாளை செவ் வாய்க்கிழமை பொற்பதி அறி வாலயக்கட்டடத் தொகுதியில் காலை 9 மணிக்கு நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

புதுவருடத்தை நல்ல நிகழ்வு டன் ஆரம்பித்தல் எனும் தொனிப்பொருளுடன் 2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு ஒவ்வொரு புதுவருடமும் நடை பெறும் இவ் இரத்ததான நிகழ்வில் சராசரி 50இற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் குருதிக்கொடை வழங்கி இவ் உன்னத பணிக்கு உதவிவருகின் றார்கள்.

இரத்ததான நிகழ்வில் 2012 ஆம் ஆண்டு 44 பேரும் 2013 ஆம் ஆண்டு 55 பேரும் 2014 ஆம்54 பேரும் இரத்ததானம் செய்துள்ளார்கள்.

பொதுமக்களிடமிருந்து கிடைக்கின்ற நிதி உதவி மூல மாக ரீசேட்களை கொள்வனவு செய்து குருதிக்கொடையாளர் களின் தேவையைக் கௌர வித்து புதுவருடத்தில் அவற்றை அவர்களுக்கு வழங்கி வருகி றார்கள்.

# காந்தியின் வாழ்க்கை முறைகளை பின்பற்றி வாழ்ந்தவர் வேலாயுதபிள்ளை

## காந்தி சேவா சங்கத் தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மகாத்மா காந்தியின் வாழ்க்கை முறைகளை காந்தியக் கொள்கைகளைத் தனது வாழ்வில் கடைப்பிடித்து வாழ்ந்தவர் காந்தி சேவா சங்கத்தின் நிறுவுநர் என அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் ஸ்தாபகர் அமரர் காந்தி வேலாயுதபிள்ளையின் 22 ஆவது ஆண்டு நிறைவு அஞ்சலிக் கூட்டத்தில் உரைநிகழ்த்திய அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் தலைவர் தி.இராசநாயகம் தெரிவித்தார்

இல.774 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணத்தில் உள்ள சங்கத்தின் யாழ்.மாவட்டப் பணிமனையில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றிய தி.இராசநாயகம் தொடர்ந்து கூறியதாவது,

அமரர் வேலாயுதபிள்ளை மகாத்மா காந்தியின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு அவரது கொள்கைகளை வாழ்வில் கடைப்பிடித்தது மட்டுமன்றி இலங்கையின் பல பாகங்களுக்கும் எடுத்துச் சென்றவர் வன்னியில் நலிவுற்ற மக்களின் வாழ்வாதாரத்தை உயர்ந்துவதற்கு பல்வேறு செயற்றிட்டங்களையும் மேற்கொண்டார்.

44 வருடங்களாக காந்திசேவா சங்கத்திற்காக தன்னை வருத்தி சேவை செய்து வந்தார். காந்திசேவா சங்கம் உருத்திரபுரத்தில் காந்தி நிலையத்தையும், தர்மபுரத்தில் கஸ்தூரிபாய் இல்லத்தில் மாதரில்லம் மற்றும் அக்கராயனில் 300 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம், கைத்தொழில், மாடு வளர்ப்பு எனப்பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்தி வந்தார்.

தன்னை ஒறுத்து மிக எளிமையான வாழ்க்கை முறையினைக் கடைப்பிடித்த அமரர் வேலாயுதபிள்ளை ஒரு சிறு குடிசையிலேயே வாழ்ந்து வந்தார். அரச அலுவலகங்களில் அவருக்கு நல்ல மதிப்பு இருந்தது. அவருடைய காந்திய செயற்றிட்டங்களுக்கு எல்லோரும் பூரண ஒத்துழைப்பு வழங்கினர்.

அக்கராயனில் 300 ஏக்கர் காடு வெட்டும்போது அங்கு வேலை செய்த தொழிலாளர்களுக்கு தண்ணீர் குடத்தை தனது தலையில் சுமந்து சென்று தண்ணீர் வழங்கியவர். இத்தகைய செயற்பாடுகளால் அவர் தன்னை ஒறுத்து கடின உழைப்பை மேற்கொண்டார் என்பதை அறிய முடிகிறது எடுத்த எந்தக் காரியத்தையும் மனந்தளராது செய்து முடிக்கும் ஆற்றல் அவருக்கு இருந்தது என்றார்.

இந்நிகழ்வில் சங்கத்தின் பொதுச் செயலாளரும் காந்தீயம் பத்திரிகை ஆசிரியருமான எம்.ஷாந்தன் சத்திய கீர்த்தி தொடக்கவுரை நிகழ்த்தினார். அஞ்சலி உரையை ஓய்வுபெற்ற அதிபர் மூதறிஞர் ஆ.சபாரத்தினம் நிகழ்த்தினார். இக் கூட்டத்தில் காந்திய கல்விச் செயற்பாடுகள் மற்றும் சங்கத்தின் எதிர்காலத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடலும் இடம் பெற்றன. (10)

# றோட்டறிக் கழகத்தால் கல்வி உபகரணங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)



யாழ்.குடாநாட்டில் 7 பாடசாலை மாணவர்களுக்கு அண்மையில் பாடசாலை உபகரணங்கள் றோட்டறிக் கழகத்தினால் வழங்கப்பட்டது. யாழ்.பாதுகாப்புத் தலைமையகத்தின் 52ஆவது படையணியின் வேண்டு கோளுக்கமைய கொழும்பு றோட்டறிக் கழகம் இவ் உபகரணங்களை வழங்கியுள்ளது.

இதற்கமைய விநாயகர் வித்தியாலயம், புனித எஸிதோர் வித்தியாலயம், தோப்பு அருனந்தி ஆரம்ப பாடசாலை, நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம், கரம்பகம் கலவன் பாடசாலை, கோவிலாக்கண்டி மகா லஷ்மி வித்தியாலயம் மற்றும் சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் ஆகியவற்றைச் சேர்ந்த 323 மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.


அத்துடன் இப்பாடசாலைகளுக்கான காரியாலய உபகரணங்களும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் கொழும்பு றோட்டறிக் கழக அதிகாரிகள், இராணுவத்தின் உயரதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# புதுவருடத்தை முன்னிட்டு சமுர்த்திக் கொடுப்பனவு

வேலணை பிரதேசத்தில் புதுவருடத்தை முன்னிட்டு நேற்று சமுர்த்திக் கொடுப்பனவு வழங்கப்பட்டடுள்ளது. வேலணை பிரதேசத்தில் 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களுக்கே நேற்று சமுர்த்திக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. ஏனைய வட்டாரங்களைச் சேர்ந்தவர்களுக்கு இக் கொடுப்பனவு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

குடும்ப அங்கத்தவர் அடிப்படையிலேயே இக்கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாகவும் இக்கொடுப்பனவை பெறத்தவறிய பயனாளிகள் அனைவருக்கும் நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினத்திலும் கூட வழங்க வேண்டிய தேவை இருந்ததாக சமுர்த்தி ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

புதுவருடப் பிறப்புக்கு முன்னதாக இக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதால் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய இலகுவாக இருக்கும் என சமுர்த்திப் பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.




# பொய்யனாரின் கையில் கொள்ளை காசு

காற்றாடி மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நடவடிக்கை பளைப்பகுதியில் நடக்கிறதல்லவா!

இதை ஒரு தனியார் நிறுவனம் செய்கிறது. இந்த நடவடிக்கையை அந்த நிறுவனம் வடமாகாண சபைத் தேர்தல் நடக்கிறதுக்கு முதலே ஆரம்பித்து விட்டது.

ஆகவே, இதற்கான உடன்படிக்கையை அது மத்திய அரசுடன் செய்து. அதன் விதிமுறைகளையும் ஏற்றுக்கொண்டு விட்டது.

ஆனால், வடமாகாணசபைத் தேர்தலோடு இந்தத் திட்டத்தின் விதி வேறு விதமாக விளையாடியது.

வடக்கின் சூழியல்துறை மன்னன், சிங்கன், தங்கன் என்றெல்லாம் புகழ்பெற்ற பொய். ஐங்கரனார் இந்தக் காற்றாடி விசயத்தைப் பற்றிக் கேள்விப்பட்டார்.

உடனே பறந்தோடிப் பளைக்குப்போய்ப் பார்த்துப் படங்கள் எடுத்து. சம்பந்தப்பட்ட நிறுவனத்துக்கு உத்தரவிட்டார், 'உடனடியாக வேலைகளை நிறுத்த வேணும். இது சுற்றுச் சூழலுக்கு ஆபத்தான விசயம். பறவைகள் பறக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. காற்றாடிகளின் சத்தத்தினால். அயலில் உள்ள மக்கள் அமைதியாக இருக்க முடியாது. ஆகவே இந்தத் திட்டத்தை வடமாகாணசபை அலசி, ஆராய்ந்த பிறகுதான் இதற்கான அனுமதியைப் பற்றி யோசிக்கலாம்' என்று.

காற்றாடி நிறுவனத்துக்குக்குக் குழப்பம். மத்திய அரசுடன் செய்த உடன்படிக்கையை அவர்கள் எடுத்துக்காட்டினார்கள். உரிய முறைப்படியே தாங்கள் செயற்படுகிறோம் என்று விளக்கினார்கள்.

பொய்யனார் விடவேயில்லை. 'மத்திய அரசின் விளையாட்டெல்லாம் இங்கே செல்லாது. நீங்கள் தொடர்ந்து செயற்பட்டால் மக்களைக்கொண்டு உங்களுக்கு எதிரான போராட்டங்களை நடத்துவோம். நீதிமன்றத்தில் மக்களின் மூலமாக வழக்குத் தொடுப்போம். இடைக்காலத் தடையைப் போடுவோம்' என்றெல்லாம் மிரட்டினார்.

இந்த மாதிரிச் சிக்கல்கள் வந்தால் அதனால் தொடரும் வேலைகள் தடைப்படும். அப்படி வேலைகள் தடைப்பட்டால் அதனால் பெரும் நட்டமும் ஒப்பந்தக்காரருக்கான இழப்பீடுகளும் கொடுக்க வேணும். திட்டம் தாமதமாகினால் அதனால் ஏற்படும் நட்டமும் அதிகமாகிவிடும்.

இதையெல்லாம் கணக்குப்பார்த்த நிறுவனத்தினர் பொய்யனாருடன் ஒரு ரகசிய டீலுக்கு முயற்சித்தனர்.

இதைத்தான் பொய்யனாரும் எதிர்பார்த்தார்.

நிறுவனம் விரித்த வலையில் வீழ்ந்தார் பொய்யனார். பொய்யனார் விரித்த வலையில் வீழ்ந்தனர் நிறுவனத்தினர் என இதை நீங்கள் எப்படியும் வைத்துக்கொள்ளுங்கள். பிஸினஸ் என்றால் அப்படித்தான்.

விளைவு பொய்யனாரின் கையில் கொள்ளை காசு.

சூழியலுக்கு ஓ.கே.

மக்களுக்குப் பெப்பே.

காசை வாங்கிய பொய்யனார் 'யாழ்ப்பாணத்தில் சில இடங்களுக்கு தண்ணீர் வழங்குகிறோம்' என்று பெரிய பில்ட் காட்டிக்கொண்டு, பவுசர் ஒன்டை வாங்கித் தண்ணி காட்டினார்.

இந்த பவுசருக்கு வேற கணக்குகளும் காட்டப்பட்டது என்பது வேறு பல கதைகள்.

அதோட இன்னும் சில சின்ன விளையாட்டுகளைக் காட்டினார்.

எல்லாம் ஒரு எம்.ஜி.ஆர் விளையாட்டுத்தான்.

அப்படியே மிச்சக்காசை அமுக்கிச் சென்னைக்குப் பிள்ளைகளின் கணக்கில் ஏற்றினார் பொய்யனார்.


ஆனால், என்னதான் இருந்தாலும் கெட்டிக்காரன் வல்லமை எட்டு நாளைக்குத்தானே.

உள் ரகசியங்கள் மெல்ல மெல்ல வெளுக்கத் தொடங்கீட்டுது.

'பொய்யனார் காசு வாங்கீட்டார்' என்ற கதை கிளம்பியபோது கணக்குக் காட்ட வேணும் என்ற பிரச்சினையும் வந்தது.

என்னதான் நெருக்கடி வந்தாலும் பொய்யனார் சளைத்து விடமாட்டார். புலியான புலிக்கே கணக்குக் காட்டிய – கணக்கு விட்ட ஆள் அல்லவா....

புலிகளின் காலத்தில் புலிகளின் பொருண்மிய அமைச்சோடும் கலை, கலாசார அமைச்சோடும் அரசியல் துறையோடும் அணுகி அவர்களுக்கே அலுவல் பாக்கிறதாகக் காட்டி புலம்பெயர் தேசம் முதல், தமிழ் நாடு வரையில் உழைச்ச காசு கொஞ்ச நஞ்சமல்ல.




போதாக்குறைக்கு ஊர்க் கோயில்களுக்குத் தமிழ் நாட்டுப் பாடகர்களையும் இசை அமைப்பாளர்களையும் கொண்டு பாட்டுகளை அடித்துத்தாறன் என்டு இடைத் தரகர் வேலை பார்த்து உழைத்தது இன்னொரு தொகை.

இப்பிடியெல்லாம் ஆயிரம் தேசியத் தொண்டாற்றிய பொய்யர் விட்டார் பெரிய பெரிய புலுடாக்களை...

ஆனால், என்னதான் இருந்தாலும் பொய்யற்றை புலுடாக்கள் ஒன்டும் இந்தத் தடவை எடுபட்வில்லை.

இப்ப காற்றாடி விசாரணைக்கு மாகாணசபைத் தலைவர் தயார்ப்படுகிறார் என்டு கேள்வி.....

தெற்கில் மட்டுமா ஊழல்.... வடக்கிலும்தான்....

ஆற்றலைக்காட்டிலும் ஆர்வமே வெற்றிக்குக் காரணம்.
-சார்லஸ் பக்ஸ்டன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## இயல்புகளில் நஞ்சைக் கலக்க வேண்டாம்!

"பலனைப் பற்றி யோசித்துக் கொண்டிராதே, கடமையைச் செய்" என்று வலியுறுத்துகிறது, போர்க்களத்தில் அருச்சுனனுக்காகச் சொல்லப்பட்ட கீதை. இதற்கு விளக்கம் எழுதுகிற வினோபாவே சொல்கிறார்:

"குழந்தை விளையாடுகிறது. அது விளையாடுவதில் உள்ள மகிழ்ச்சிக்காகவே விளையாடுகிறது. ஆனால், விளையாடுவதன் காரணத்தால் அதற்கு உடற்பயிற்சியின் பயனும் கிடைத்து விடுகிறது. உடற்பயிற்சியின் பயனுக்காகவே விளையாடுவதாக நினைத்துக்கொண்டு குழந்தை விளையாடுவதில்லை; விளையாட்டில் கிடைக்கும் சந்தோஷத்திற்காகவே விளையாடுகிறது. இதுபோலவேதான், செயலின் பயனில் ஆர்வம் காட்டுவோரை விட செயலில் ஆர்வம் காட்டுவோரையே கீதை கொண்டாடுகிறது" என்கிறார் வினோபாவே.

எதற்கும் பயன் நோக்கம் ஒன்றிருக்க வேண்டும் என்பதாகவே நாம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டிருக்கிறோம். உழைப்பது–பணத்திற்காக; உதவுவது – பிறரும் நமக்கு உதவ வேண்டும் என்பதற்காக; அன்பு செலுத்துவது – அன்பைப் பெறுவதற்காக என்பதாய் நாம் நினைத்துச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

ஆனால் இவையெல்லாம் நம் இயல்புகள். உழைக்காமல், அடுத்தவனை மதிக்காமல், அன்பு செய்யாமல் எல்லாம் நம்மால் இருக்க முடியாது. கொஞ்சம் முயன்று பார்த்தால் புரிந்துவிடும். அல்லது பிறந்த குழந்தைகளைப் பார்த்தால் தெரிந்துவிடும்.

நம் அடிப்படைக் குணங்கள் இவை. மனிதர்களாக இருத்தல் என்பது இதுதான். ஆனால், அவ்வாறு இயல்பாக நம்மால் செயற்பட முடியாதபடி சமூகச் சூழல் இருக்கிறது.

பகையும் வெறுப்பும் வன்முறையுணர்வும் துவேசமும் நம்மில் வண்டி வண்டியாக நாளும் பொழுதும் ஏற்றப்பட்டுக் கொணடிருக்கிறது. பேச்சாலும் எழுத்தாலும் நம்முள் துவேசம் மேலோங்கத் தூண்டப்பட்டு வருகிறது.

நம்மை மனித நிலையிலிருந்து கீழிறக்கும் துவேசப் பேச்சுக்களை நாம் அவதானித்து விலக்க வேண்டும். நாம் வரலாற்றினூடு வளர்ந்து விரிந்து வருகிற மனிதர்கள். நம்மை நாமே குறுக்கிக் கொண்டும் பிளவுபடுத்திக் கொண்டும் அழித்து-அழிந்து கொண்டிருப்பது அவலமானது.

எவர் பேச்சைக் கேட்டும் உணர்ச்சிவசப்பட்டும், மனிதர்களாகிய நமது அடிப்படைக் குணங்களை விட்டுவிடாதிருந்தாலே போதும், அனேக தகராறுகளுக்கு இடமில்லை.

பயம் இல்லாத, தீங்குகள் நேராத, அடிப்படைத் தேவைகள் கிடைக்கப் பெற்ற, பாதுகாப்பான ஒரு வாழ்க்கைக்கே எல்லோரும் ஏங்குகிறார்கள்.

அவரவர் மதத்தில் அத்தகைய கனவுப் பிரதேசங்களைக் கண்டு வைத்திருக்கிறார்கள். திருமறையில், ஏசாயா என்ற தீர்க்கர் இறைஆட்சி பற்றிக் கூறுவதைப் பாருங்கள்:

"அப்பொழுது ஓநாய், ஆட்டுக்குட்டியோடே தங்கும்; சிறுத்தை வெள்ளாட்டுக் குட்டியோடு படுத்துக் கொள்ளும்; கன்றுக்குட்டியும், சிங்கக் குருளையும், காளையும் ஒருமித்திருக்கும். ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான். பசுவும் கரடியும் கூடி மேயும். பால் குடிக்கும் குழந்தை விரியன் பாம்புப் புற்றின் மேல் விளையாடும்... என் பரிசுத்த மலை எங்கும் தீங்கு செய்வாரும் இல்லை, கேடு செய்வாரும் இல்லை" என்கிறது திருமறை.

அத்தகைய ஒரு அன்புநிறை வாழ்க்கைதானே நம் எல்லோரது விருப்பமாகவும் இருக்கிறது; இருக்க வேண்டும்.

பல்வேறு உயிரினங்களின் கூட்டிணைவில் ஓர் அமைதிச் சமுதாயமாகப் பூத்துக் குலுங்குகிற பூங்கா. ஒன்றையொன்று அழித்துவிட முயலாத எளிய உயிரினங்கள் சேர்ந்து வாழ்கிற சோலை. இதுவே நமக்கு வேண்டும். - ஆசிரியர்

# மகிந்த புதிய அரசின்

**2015 ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட காலம் முதல் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொடர்பான கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வந்த கொழும்பு ஊடகவியலாளர் ரங்கா ஜயசூரிய, அண்மைக்காலமாக பொருளாதார மற்றும் உட்கட்டுமான அபிவிருத்தி விடயங்களில் புதிய அரசாங்கம் கடைப்பிடித்துவரும் கொள்கைகள் காரணமாக, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சரியே என்று எண்ணத் தோன்றுவதாக கூறத் தலைப்பட்டுள்ளார். இன்றுள்ள நிலைமைகளின் அடிப்படையில் இவ்வாறு சொல்வதைத் தவிர தனக்கு வேறு வழியில்லை என்றும், டெய்லி மிறர் பத்திரிகையில் மார்ச் 30ஆம் திகதி எழுதிய ஆக்கமொன்றில் அவர் குறிப்பிட்டுள்ளார்.**

**அவருடைய ஆக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய கருத்துக்களின் தொகுப்பு வருமாறு.**

அண்மையில் இரத்தினபுரியில் நடைபெற்ற பேரணியில் வாசித்தளிக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செய்தியில், தற்போதைய அரசாங்கம் நாட்டின் அபிவி ருத்தியை தடுத்து நிறுத்திவிட்டது என அவர் குற்றஞ்சாட்டியிருந்தார். அவருடைய இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்வதைத் தவிர இப்போது எனக்கு வேறு வழியில்லை.

இந்த அரசாங்கம் நாட்டின் அபிவிருத்தியை பின்னோக்கித் தள்ளிவிட்டது. இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் கடந்த ஆண்டு இருந்த 7.4 வீத்திலிருந்து இந்த ஆண்டு 7 சதவீதமாக குறைந்து விட்டது என்ற ஆசிய அபிவிருத்தி வங்கியின் அறிவிப்பு இதனை ஏற்கனவே தெளிவாக நிரூபித்துவிட்டது.

2015 - 16 இல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் 8 சதவீதத்தைத் தொடும் என்று சில மாதங்களுக்கு முன்னர் எதிர்வு கூறியிருந்த ஆசிய அபிவிருத்தி வங்கி, இப்போது அது 7 சதவீதமாகவே இருப்பதாக தகவல் வெளியிட்டுள்ளது. மீண்டும் 2016இல் பொருளாதார வளர்ச்சி வீதம் 7.4 சத வீதத்தை தொடும் என்றும் இப்போது அது கூறியிருந்தாலும். இன்னுமே அது முன்னர் எதிர்வுகூறியிருந்த 8 சதவீதத்தைவிடக் குறைவாகவே இருக்கப்போகிறது என்பது தெளிவாகிறது.

நடுத்தர மற்றும் நீண்டகால முதலீட்டு வாய்ப்புக்கள் நன்றாகவே இருந்தாலும். தற்போது நாட்டில் நிலவும் அரசியல் சூழ்நிலையில் முதலீடுகள் பாதிக்கப்படும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூத்த பொருளியல் நிபுணர் தெடாரேரு கூறியிருக்கிறார்.

## பொருளாதார முகாமைத்துவக் குறைபாடும் கைவிடப்படும் அபிவிருத்தித் திட்டங்களும்



புதிய அரசாங்கத்தின் பொருளாதார முகாமைத்துவத்திலுள்ள குறைபாடுகள் ஏற்கனவே தெளிவாகத் தெரியத் தொடங்கிவிட்டது. பாரியளவு அபிவிருத்தி திட்டங்கள் பலவும் நிறுத்தப்பட்டும் சில மீளாய்வு செய்யப்பட்டும் வருகின்றன.

கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தித் திட்டம் நிறுத்தப்பட்டு மீளாய்வு அறிக்கைக்காகக் காத்திருக்கிறது. டாடா வீடமைப்புத் திட்டம் மீளாய்வு செய்யப்படுகிறது. தெற்காசியாவின் மிக உயர்ந்த கட்டடமாக அமையும் என்று எதிர்பார்க்கப்பட்ட தாமரைக் கோபுரத் திட்டம், அது அமைக்கப்படவிருக்கும் காணியின் உரிமைக்காக இரண்டு அமைச்சுக்களிடையே ஏற்பட்டுள்ள முரண்பாடுகளால் சிக்கலை எதிர்நோக்கியுள்ளது.

வடக்கு அதிவேக நெடுஞ் சாலைத் திட்டம் கைவிடப்படும் அபாய நிலையில் உள்ளது. பாதுகாப்பு தலைமைச் செயலக கட்டடம் அமைக்கும் திட்டமும் கைவிடப்பட்டுள்ளது. 50 பில்லியன் பெறுமதியுடைய இந்தத் திட்டம், ஆசியாவின் மிகப்பெரும் படைப்பல சக்தியாக இலங்கை வரவிருக்கிறது என்றாலன்றி பிரயோசனமற்ற ஒன்றே. பதிலாக, இந்தளவு பணத்தை பாடசாலை மாணவர் களின் ஆங்கில மற்றும் கணினி அறிவு விருத்தித் திட்டங்களிலோ அன்றி இராணுவத்தினரின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி திட்டங்களிலோ முதலீடு செய்யலாம்.

## பொன் முட்டையிடும் வாத்தை வெட்டிக்

அரை டசினுக்கும் மேற்பட்ட கசினோக்கள் தற்போதும் நாட்டில் இயங்கிக்கொண்டிருக்கும் நிலையிலும், அவுஸ்ரேலிய சூதாட்டத்துறை கோடீஸ்வரன் ஜேம்ஸ் பாக்கரின் 300 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுதியான சூதாட்ட வசதிகளுடன் கூடிய உல்லாச விடுதித் திட்டம், அதற்கான அனுமதி அளிக்கப்படாத காரணத்தினால் கைவிடப்பட்டுள்ளது.

ஒழுக்க விழுமியங்களை முன்னிறுத்துவோர் சூதாட்ட விடுதிக்கான அனுமதி மறுப்பை நியாயப்படுத்தினாலும், இன்னும் வெளிநாட்டு பணிப்பெண்கள் மற்றும் உள்நாட்டில் தேயிலை கொய்யும் பெண்களின் உழைப்பில் தங்கியிருக்கும் இலங்கை போன்றதொரு நாட்டில், ஒழுக்கமான முறையில் சூதாட்டத்தின் மூலம் பணம் சம்பாதிப்பதை குறைந்தளவு மதிப்புள்ள ஒன்றாக கருதிவிட முடியாது.

முன்னர் ராஜபக்ஷ நிர்வாகம் செய்ய மறுத்தது போலல்லாமல், சூதாட்ட விடுதிகளுக்கு முறையான வரியை அறிவிடுவதன் மூலம் நாட்டுக்கு வருமானத்தைத் தேடிக்கொள்வதற்குப் [illegible]திலாக, பொன் முட்டை இடக்கூடிய [illegible] வெட்டிக்கொல்வது போன்ற [illegible] பாட்டில் புதிய அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது.

தடைப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களினால் இன்னும் சிறிய அளவிலான வேறு பல இழப்புக்களும் ஏற்படவே செய்திருக்கிறது. உதாரணத்துக்கு,

# ராஜபக்ஷ சரியே என்று நிரூபிக்கும் அபிவிருத்திவிரோத செயற்பாடுகள் பொன் முட்டையிடும் வாத்தை அது கொன்றுவிட்டதா?

**கொழும்பு ஊடகவியலாளர் ரங்கா ஜயசூரிய**

**தமிழில்: கோ.ருஷாங்கன்**

தற்போதைய அரசாங்கத்தின் நிர்வாகத்துக்கு தலைமை தாங்கும் ஐக்கிய தேசியக் கட்சியில் இருக்கக்கூடிய சிறந்த பொருளாதார முகாமையாளர்களுக்கு இதெல்லாம் தெரியாத விடயமல்ல. முன்னைய ஆட்சியின் தலைவர்களுக்கு

வேண்டுமென்றே ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஆட்சியாளருக்கு அபகீர்த்தி ஏற்படுத்துவதற்கு ஏராளமான

## அரசியல் பழிவாங்கல் நோக்கத்துக்காக பலியிடப்படும் பொருளாதார அபிவிருத்தி

**இலங்கையில் இன்னும் பல முதலீடுகளைச் செய்யும் வாய்ப்புள்ள சீன அரசாங்கத்துக்கு, கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தித் திட்டம் தொடர்பான குழப்பகரமான செய்திகளை வழங்குவதன் மூலம், நாட்டின் முதலீட்டு சூழ்நிலையையே ஆபத்தான நிலைக்கு இட்டுச் செல்லப்பட்டுள்ளது.**

அபகீர்த்தி ஏற்படுத்தவேண்டும் என்ற ஒரே அரசியல் நோக்கத்திற்காக, அவர்கள் தெரிந்தே, நாட்டின் பொருளாதார எதிர்காலத்தை பாதிப்புறச் செய்யும் இந்தக் கைங்கரியத்தில்


நியாயங்கள் இருக்கவே செய்கின்றன. இதில் எந்தத் தவறும் கிடையாது. ஆனாலும், கடந்த ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற முறைகேடுகள், அளவுக்கு மிஞ்சிய செலவீனங்களுக்கான பொறுப்பை ராஜபக்ஷாக்கள்மீது சுமத்துவதற்குப் பதிலாக, உட்கட்டுமான அபிவிருத்தி என்ற அவர்களது வலிமையான வாதத்துக்கு இவர்கள் சவால் விடுக்க முயல்கிறார்கள்.

இந்த இடம் மாறிய தந்திரோபாயம், கடந்த ஆட்சியாளரைப் பலவீனப்படுத்துவதற்குப் பதிலாக, உட்கட்டுமான அபிவிருத்திச் செயற்பாடுகளையே பலவீனப்படுத்துகின்றன.

வேகமாக இது பாதிப்படையச் செய்யப்படுமளவுக்கு நாட்டுக்கு மேலும் நன்மைகள் கிடைக்கும் என்று இவர்கள் எதிர்பார்க்கிறார்கள். விரைவில் இத்தகைய உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்களுக்கு எதிரான போராட்டங்கள் வெடிப்பதற்கு இது வழிசெய்யும்.

ஆனால், மகிந்த ராஜபக்ஷவோ, இத்தகைய எதிர்ப்புக்கள் எல்லாவற்றையும் சமாளித்து உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துச் சென்றார். நாம் அபிவிருத்தியில் ஒரு பாய்ச்சலை அடைய வேண்டுமானால் திடமான முடிவு எடுக்கும் செயற்பாடு எமக்கு அவசியமாகிறது.

இந்த விடயத்தில் மகிந்த ராஜபக்ஷவை பாராட்டுவதைத்தவிர எனக்கு வேறு வழியில்லை. முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன அன்று நாட்டுக்குப் பெரும் பொருளாதார சுமையை ஏற்படுத்திய அரசு மானிய முறையை நிறுத்தி அதற்குச் செலவாகும் பணத்தை



தெற்குக்கான அதிவேக நெடுஞ்சாலை அமைக்கப்பட்டபோது, "எமக்கு நெடுஞ்சாலை வேண்டாம்" என்று பதாகைகள் தாங்கியபடி எதிர்ப்புக் காட்டப்பட்டது.

மேல்கொத்மலை திட்டத்தை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

## அபிவிருத்தியில் பாய்ச்சலை அடைய திடமான முடிவெடுப்பது அவசியம்!



**முன்னைய ஆட்சியின் தலைவர்களுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தவேண்டும் என்ற ஒரே அரசியல் நோக்கத்திற்காக, அவர்கள் தெரிந்தே, நாட்டின் பொருளாதார எதிர்காலத்தை பாதிப்புறச் செய்யும் இந்தக் கைங்கரியத்தில் வேண்டுமென்றே ஈடுபட்டுள்ளனர்.**

மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் காலங்களில் தடுத்து நிறுத்துவதில் இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் வெற்றியீட்டினார்.

உள்ளூர் எதிர்ப்புக்களுக்கு அஞ்சி, கட்டுநாயக்கா விமான நிலைய விரிவாக்கல் திட்டத்தை ரணில் விக்கிரமசிங்க கைவிட்டார்.


உட்கட்டுமான அபிவிருத்திக்குப் பயன்படுத்தியதைப்போன்றதொரு செயற்பாடாகவே இதை நான் பார்க்கிறேன்.

## கொன்ற புதிய அரசு!

டாடா வீடமைப்புத் திட்டம் கைவிடப்பட்டதன் மூலம் கொழும்பு சேரிப்புற குடியிருப்புக்களை அகற்றும் இன்றைய காலகட்டத்தின் முக்கியமான ஒரு திட்டமும் சேர்த்தே கைவிடப்பட்டுவிட்டது.

இலங்கையில் இன்னும் பல முதலீடுகளைச் செய்யும் வாய்ப்புள்ள சீன அரசாங்கத்துக்கு, கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தித் திட்டம் தொடர்பான குழப்பகரமான செய்திகளை வழங்குவதன் மூலம், நாட்டின் முதலீட்டு சூழ்நிலையையே ஆபத்தான நிலைக்கு இட்டுச்செல்லப்பட்டுள்ளது.

**இன்னும் வெளிநாட்டு பணிப்பெண்கள் மற்றும் உள்நாட்டில் தேயிலை கொய்யும் பெண்களின் உழைப்பில் தங்கியிருக்கும் இலங்கை போன்றதொரு நாட்டில், ஒழுக்கமான முறையில் சூதாட்டத்தின் மூலம் பணம் சம்பாதிப்பதை குறைந்தளவு மதிப்புள்ள ஒன்றாக கருதிவிட முடியாது**




மிகுதி நாளை

# களவு, கொள்ளைகளை ஒரேநாளில் நிறுத்த முடியாது

## என்கிறார் சுஜீவ

நாட்டில் இடம்பெற்று வரும் களவு, கொள்ளைகளை ஒரே நாளில் நிறுத்திவிட முடியாது என பிரதி நீதி அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவிததுள்ளார்.

மாலம்பே பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் இடம்பெற்று வரும் ஊழல் மோசடிகள் மற்றும் விழுமிய விரோத செயற்பாடுகளை ஒரே நாளில் தடுத்து நிறுத்திவிட முடியாது.

நல்லாட்சியுடன் எதிர்காலம் மாற்றமடையும். 100 நாள் திட்டமென்பது மிகவும் கடினமான ஓர் செயற்றிட்டமாகும்.

அழுக்கடைந்த தேசத்தை சுத்தப்படுத்தும் நடவடிக்கைகளிலேயே நாம் ஈடுபட்டுள்ளோம். எனக்கு எதிராக சேறு பூசவும் பலர் முயற்சித்து வருகின்றனர்.

ஓர் நடிகை தற்போது எனக்கு எதிராக குற்றம் சுமத்தி வருகின்றார். இந்தக் குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் கிடையாது.

மாற வேண்டிய அனைத்தும் நல்லாட்சியுடன் மாற்றமடையும் என சுஜீவ சேனசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

# சுதந்திரக்கட்சியில் களையெடுப்பு ஆரம்பம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தீவிர ஆதரவாளர்களைக் களையெடுக்கும் அதிரடி நடவடிக்கையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இறங்கியுள்ளார்.

இதன்படி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவில் இருந்து முன்னாள் அமைச்சர்கள் பந்துல குணவர்த்தன, ரி.பி. எக்கநாயக்க, சாலிந்த திசநாயக்க, எம்.எம்.சந்திரசேன ஆகியோர் நேற்று முன்தினம் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் என்ற முறையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் தீவிர அரசியலுக்குக் கொண்டு வருவதற்காக வெளிப்படையான முயற்சிகளில் ஈடுபட்டவர்களே இவர்களாவர்.

மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக அவருக்கு நெருக்கமான முத்தெட்டுவே ஆனந்த தேரர் நடாத்திய அதிஸ்டான பூஜையில், பந்துல குணவர்த்தனவும் பங்கேற்றிருந்தார்.

அதேவேளை, சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவில் இருந்து நீக்கப்பட்ட, எஸ்.எம்.சந்திரசேன மற்றும் ரி.பி. எக்கநாயக்க ஆகியோரும் மகிந்த ராஜபக்ஷவுக்கு நெருக்கமானவர்கள் என்பதுடன், கண்டியில் நடாத்தப்பட்ட கூட்டத்திலும் இவர்கள் பங்கேற்றிருந்தனர்.

சாலிந்த திசநாயக்க அண்மையில் குருநாகலில் நடந்த கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவை அவமானப்படுத்தும் வகையில் நடந்து கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவானவர்கள் பலம் பெறத் தொடங்கியுள்ள நிலையில், மைத்திரிபால சிறிசேன இந்தத் திடீர் நடவடிக்கையில் இறங்கியுள்ளார்.

இதேவேளை சிங்கப்பூர் பிரஜையை மத்திய வங்கியின் ஆளுநராக நியமித்த விடயம் மற்றும் திறைசேரி முறிகள் தொடர்பான சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் தோற்கடித்தமை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, தமது அங்கத்துவம் நீக்கப்பட்டுள்ளதாக பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரம் மற்றும் எதிர்காலத்திற்கு பாதிப்பை ஏற்படுத்த முயல்பவர்களுக்கு எதிராக திரண்டமைக்காக இடம்பெற்ற ஒரு நடவடிக்கையாகவே இதனைக் கருதுவதாக அவர் மேலும் கூறினார்.

# மைத்திரி-மகிந்த இணைவு தடைக்கல்லாக சந்திரிக்கா

## டளஸ் குற்றச்சாட்டு



மைத்திரி-மகிந்தவின் இணைவுக்கு இடையில் தடைக்கல்லாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவே காணப்படுவதாக முன்னாள் அமைச்சரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினருமான டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி சிக்கலுக்கு முகம் கொடுத்துள்ளதா? என சிங்கள ஊடகமொன்று அவரிடம் வினவியதற்கே இவ்வாறு பதிலளித்துள்ளார்.

ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி சிக்கலுக்கு முகம் கொடுக்கவில்லை. சிக்கலுக்குள் தள்ளப்பட்டுள்ளது. இதற்குக்காரணம் யார் என்பதற்கு, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு விரல் நீட்ட நான் பயப்பட மாட்டேன் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் முரண்பாடுகளை தீர்த்து வைக்கும் நகர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இது தொடர்பில் முன்னாள் அமைச்சர்கள் பி.பி.ஏக்கநாயக்க மற்றும் குமார வெல்கம ஆகியோர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொதுத் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கப்படுவாரா? என்று குமார வெல்கம கேட்டபோது, அவரை போட்டியிட முடியாது என்று யார் கூறியது? மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிடலாம் என்று மைத்திரி குறிப்பிட்டுள்ளார்.

எனினும் மகிந்த ராஜபக்ஷ மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளமையால் அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மூலம் போட்டியிட முடியாது என்று மைத்திரிபால தெரிவித்துள்ளார்.

அத்துடன் சிறுபான்மையினங்களும் மகிந்த ராஜபக்ஷவை விரும்பவில்லை என்று ஜனாதிபதி கூறியுள்ளார்.

# பயங்கரவாத தடைச்சட்டம் தீர்மானம் எதுவும் இல்லை



பயங்கரவாத தடைச் சட்டம் குறித்துத்தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என அரசாங்கம் அறிவிததுள்ளது. 19ஆவது திருத்தச் சட்டம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்படும் வரையில், பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்காது என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

19ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதில் அரசாங்கம் அதிக நாட்டம் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். அதன் பின்னரே பயங்கரவாதத் தடைச்சட்டம் உள்ளிட்ட ஏனைய விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் மனித உரிமைக் கொள்கைகள் கோட்பாடுகளுக்கு முரணானது என மனித உரிமை அமைப்புக்கள் குற்றம் சுமத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# ஐ.தே.க.வேட்பாளர் தெரிவு பூரண அதிகாரம் ரணிலிடம்



(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் பூரண அதிகாரம் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் பொதுத்தேர்தலில் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் தெரிவு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நேரடி கண்காணிப்பில் இடம்பெறவுள்ளது. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களினால் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் பொறுப்பு ரணிலிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மிகவும் பொருத்தமான ஓர் குழுவினை நாடாளுமன்றத் தேர்தலில் களமிறக்க வேண்டுமென கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். கட்சியின் தலைவரது விருப்பத்திற்கு அமைய இந்தக் குழு களமிறக்கப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளனர். இத்தன்படி வேட்பாளர் பட்டியலைத் தயாரிக்கும் பொறுப்பு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதியை கைப்பொம்மையாக பயன்படுத்த முனையும் கூட்டமைப்பு

## சட்டத்தரணி கோமின் தயாசிரி சாடல்



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கைப்பொம்மையாக பயன்படுத்தி அதனூடாக தமது நோக்கங்களை அடைந்து கொள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முனைவதாக, சிரேஷ்ட சட்டத்தரணி கோமின் தயாசிறி தெரிவித்துள்ளார். சிங்கள ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வடகிழக்கு மக்களின் வாக்குகளே மைத்திரிக்கு அதிகளவில் கிடைத்துள்ள நிலையில், அவரை வடக்கிற்கு அடிமையான ஜனாதிபதியாகவே அடையாளப்படுத்த முடியுமென கூறியுள்ளார்.

19ஆவது திருத்தச் சட்டத்தில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு பெயரளவிலேயே ஜனாதிபதி பதவி [illegible] படும். அத்துடன், நிறைவேற்று அதிகாரத்தை விட நாடாளுமன்றத்தின் அதிகாரம் கூடும். இந்நிலையில் குறித்த திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படுமிடத்து ஜனாதிபதியை பிரதமர் கட்டுப்படுத்தும் ஒரு சூழ்நிலை உருவாகுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இனவாத, மதவாத அரசியல் கூட்டம் தடைவிதித்தது அரசாங்கம்

(கொழும்பு)

இனவாத அல்லது மதவாத அடிப்படையில் நடாத்தப்படும் அரசியல் கூட்டங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இனவாதத்தை அல்லது மதவாதத்தை தூண்டும் வகையில் கூட்டங்களை நடாத்தும் தனிப்பட்ட நபர்கள் அதற்கு ஒத்துழைப்பு வழங்கும் தரப்பினரை கைது செய்து கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மேலும், முகநூல் போன்ற சமூக வலைத் தளங்களில் இனவாத அல்லது மதவாத அடிப்படையில் கருத்துக்களை வெளியிடுவோரை அடையாளம் கண்டு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அவதூறு ஏற்படும் வகையில் முகநூல் ஊடாக பிரசாரத்தில் ஈடுபட்ட நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்து நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேபோன்று எதிர்காலத்தில் இனவாத மற்றும் மதவாத அடிப்படையில் செயற்படும் நபர்கள் தண்டிக்கப்படுவர்.

இந்த நடவடிக்கையானது கடும்போக்குவாத அமைப்புக்கள் தனிப்பட்ட நபர்கள் பொதுக் கூட்டங்களை நடாத்துவதற்கு கடுமையான வரையறைகளை ஏற்படுத்தக் கூடுமென தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே இன மத நல்லிணக்கத்திற்கு எதிராக குரோத உணர்வுடன் கூடிய கருத்துக்களை வெளியிடும் தரப்பினருக்கு குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் இரண்டாண்டு கால சிறைத்தண்டனை விதிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் படைப்பாளிகளுக்கு தமிழியல் விருது கௌரவம்

(கைதடி)

மட்டக்களப்பை தலைமையகமாகக் கொண்டு இயங்கிவரும் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம ஆண்டு தோறும் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வாழ்கின்ற இலங்கை தமிழ்ப் படைப்பாளிகளை ஊக்குவிக்கும் வகையில் தமிழியல் விருது வழங்கி வருகின்றது.

அந்த வகையில், இந்த ஆணடும் 7 ஆவது தடவையாக இந்த விருதை வழங்குவதற்கு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம செயல்வடிவம் கொண்டுள்ளதாக எழுத்தாளர் ஊக்குவிப்பு மையதின் மேலாளர், ஓ.கே.குணநாதன் அறிவித்துள்ளார்.

2015ஆம் ஆண்டுக்கான தமிழியல் விருதுக்கான நூல்களைத தேர்வுசெய்ய படைப்பாளிகளிடமிருந்து நூல்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வாழ்கின்ற இலங்கைத் தமிழ்ப் படைப்பாளிகள் நூலுக்கான தமிழியல் விருதுக்காக நூலகளை அனுப்பிவைக்கலாம்.

நாவல், சிறுகதை, கவிதை, குழந்தை இலக்கியம், சிறுவர் இலக்கியம், விடலை இலக்கியம், நாடகம், அறிவியல், ஆய்வியல், வரலாறு, பழந்தமிழ் இலக்கியம், மொழிபெயர்ப்பு, தொழில்நுட்பம எனப் பல்துறை சார்ந்த நூல்களை தேர்வுக்காக அனுப்பிவைக்கலாம்.

நூல்களின் 3 படிகள் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

நூல்கள், 2014 ஜனவரி முதலாம் திகதி முதல் 2014 டிசெம்பர் 31ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் பிரசுரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

முதற் பதிப்பு மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

நூல்கள் வந்துசேரவேண்டிய இறுதித் திகதி 31.05.2015 ஆகும்.

ஒரு படைப்பாளி எத்தனை வகையான படைப்புக்களையும் அனுப்பிவைக்கலாம்.

நூலுடன் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி கொண்ட விவரத்தை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

சிறந்த அறிஞர்களைக் கொண்ட நடுவர் குழு விருதுக்குரிய நூல்களையும் விருதாளிகளையும் தேர்வுசெய்யும்.

பணமும் விருதும் எழுத்தாளர ஊக்குவிப்பு மையத்தின் நிபந்த்னைகளுக்கு அமைய வழங்கப்படும்.

நூல்களைஅனுப்பவேண்டிய முகவரி: டாக்டர் ஓ.கே.குணநாதன் மேலாளர், எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், இல:64, கதிர்காமர் வீதி, அமிர்தகழி, மட்டக்களப்பு, இலங்கை. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

இலக்கிய மேம்பாட்டுக்கு உரமாய் உழைத்த மிகச் சிறந்த மூத்த படைப்பாளி ஒருவருக்கு, எழுத்தாளர் ஊக்குவிப்பு மையஸ்தாபகர் ஓ.கே.பாக்கியநாதன் உயர் தமிழியல் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது.

தமிழ் இலக்கிய மேம்பாட்டுக்கு உரமாய் உழைத்த மூத்த படைப்பாளிகள் 5 பேருக்கு, வவுனியூர் ஸ்ரீராமகிருஷ்ணா கமலநாயகி தமிழியல் விருதுடன், தலா 15,000 ரூபாய் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது.

இலங்கை படைப்பாளி அல்லாத அயல் நாட்டு தமிழ்ப் பணியாளர் ஒருவருக்கு, கல்விமான் வ.கனகசிங்கம் தமிழியல் விருதுடன், 25,000 ரூபா வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது.

இன நல்லுறவுக்காக உழைத்த சிங்களமொழி படைப்பாளர் ஒருவருக்கு வணபிதா சந்திரா அடிகளார் தமிழியல் விருதுடன், 10,000 ரூபாய் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது.

இவற்றை விட சிறந்த நூலுககான தமிழியல் விருது வரிசையில்,

2014ஆம் ஆண்டில் வெளிவந்த சிறந்த 20 நூல்களுக்கு

சுவாமி விபுலானந்த அடிகளார் தமிழியல் விருதுடன் 10,000 ரூபாய் பணப்பரிசும் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை தமிழியல் விருதுடன் 10,000 ரூபா பணப்பரிசும் புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன் தமிழியல் விருதுடன் 10,000 ரூபா பணப்பரிசும் அருட்கலைவாரிதி சு.சண்முகவடிவேல் தமிழியல் விருதுடன 10,000 ரூபாய் பணப்பரிசும் நாவலாசிரியை பவளசுந்தரம்மா தமிழியல் விருதுடன் 10,000 ரூபா பணப்பரிசும் கலைஞர் ஓ.கே.கணபதிப்பிள்ளை தமிழியல் விருதுடன் 10,000 ரூபாய் பணப்பரிசும் ஆலங்கேணி கணபதிப்பிள்ளை செல்லம்மா தமிழியல் விருதுடன் 10,000 ரூபாய் பணப்பரிசும் பம்பைமடு நாகலிங்கம் - நல்லம்மா தமிழியல் விருதுடன் 10,000 ரூபாய் பணப்பரிசும் பதிவாளர் நாயகம் எஸ்.முத்துக்குமாரன் தமிழியல் விருதுடன் 10,000 ரூபாய் பணப்பரிசும் வித்தியா கீர்த்தி ந.சந்திரகுமார் தமிழியல் விருதுடன் 10,000 ரூபாய் பணப்பரிசும் வழங்கப்படவுள்ளது.

தகவம் வ.இராசையா தமிழியல் விருதுடன் 10,000 ரூபாய் பணப்பரிசும் செந்தமிழ்ச் செல்வர் சு.ஸ்ரீகந்தராஜா தமிழியல் விருதுடன் 10,000 ரூபாய் பணப்பரிசும் பம்பைமடு கந்தையா இரஞ்சிதமலர் தமிழியல் விருதுடன் 10,000 ரூபாய் பணப்பரிசும் கவிஞர் கல்லாறன் மு.கணபதிப்பிள்ளை தமிழியல் விருதுடன் 10,000 ரூபாய் பணப்பரிசும் துறையூர் வே.நாகேந்திரன் தமிழியல் விருதுடன் 10,000 ரூபாய் பணப்பரிசும் கவிஞர் எருவில் மூர்த்தி தமிழியல் விருதுடன் 10,000 ரூபாய் பணப்பரிசும் சிவநெறிப் புரவலர் சீ.ஏ.இராமஸ்வாமி தமிழியல் விருதுடன் 10,000 ரூபாய் பணப்பரிசும் கலைஞர் அழ. அழகரெத்தினம் தமிழியல் விருதுடன் 10,000 ரூபா பணப்பரிசும் வைத்தியாச்சாரி மீராசாஹிபு அஹமது தமிழியல் விருதுடன் 10,000 ரூபா பணப்பரிசும் திருமலை லூர்து அருளானந்தம் தமிழியல் விருதுடன் 10,000 ரூபா பணப்பரிசும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

ஓவியருக்கான தமிழியல் விருது மிகச் சிறந்த ஓவியர் ஒருவருக்கு ஓவியர் கிக்கோ தமிழியல் விருதுடன் 10,000 ரூபா பணப்பரிசும் வழங்கிக் கௌரவிக்கவுள்ளதாகவும் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் மேலாளர், ஓ.கே.குணநாதன் தெரிவித்துள்ளார். (90)


# காரைநகர் கற்பக விநாயகரின் இரதோற்சவம் நாளை

(யாழ்.நிருபர்)

காரைநகர் வாரிவளவு கற்பகவிநாயகர் ஆலய தேர்த்திருவிழா நாளை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

புத்தாண்டு தினமான நாளைய தினம் அதிகாலை 4 மணிக்கு உருத்திர அபிஷேகமும் காலை 6.30 மணிக்கு விசேட அபிஷேகமும் காலை 9.45 மணிக்கு ஸ்தம்ப பூசையும் மு.ப. 10.45 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெற்று பிற்பகல் 1.30 மணிக்கு விநாயகப் பெருமான் தேருக்கு எழுந்தருளுவார்.

பிற்பகல் 3 மணிக்கு தேர்வீதி உலாவரும் காட்சி இடம்பெறும் மறுநாள் புதன்கிழமை காலை தீர்த்தோற்சவம் இடம்பெறும். (10)



**வவுனியா வடக்கு நெடுங்கேணியின் பல கிராமங்களுக்கு செல்லும் வீதிகள் பற்றைகள் சூழ்ந்து காணப்படுகின்றன. இறம்பைக்குளம் கிராமத்திற்குள் செல்லும் மருதங்குளம் அணைக்கட்டு வீதி, இறம்பைக்குளம் அணைக்கட்டுவீதி, என பல வீதிகள் பற்றைகள் சூழ்ந்து காணப்படுவதன் காரணமாக பகலில் கூட மக்கள் பயணிப்பதில் இடர்களை எதிர்கொண்டுள்ளனர். இரவுவேளைகளில் பாம்புகள் மற்றும் காட்டு விலங்குகளின் அச்சுறுத்தல்கள் கூடுதலாக காணப்படுகின்றன. வவுனியா வடக்கு நெடுங்கேணியில் மீள்குடியேற்றத்தின் பின்னர் பல வீதிகள் முழுமையாக புனரமைப்புக்கு உட்படுத்தப்படாமலிருப்பது குறிப்பிடத்தக்கது. (160)**

# நவாலியில் எள்ளுப்பயிரை அழித்துவரும் கால்நடைகள்

நவாலி தெற்கில் (ராஜராஜேஸ்வரி ஆலய வயற்பிரதேசம்) என்றுமில்லாதவாறு விவசாயிகளுக்கு எள்ளு நல்ல விளைச்சலை தந்துள்ளது.

எனினும் நவாலி தெற்கில் உள்ள பொறுப்பற்ற கால்நடை உரிமையாளர்களின் நடவடிக்கையால் எள்ளுப் பயிர்கள் அழிவடையும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு நவாலியில் உள்ள 5 பொது அமைப்புக்கள் ஒன்று கூடி கமநலசேவைகள் பிரதி ஆணையாளரின் அவசர கவனத்திற்கு கொண்டுவந்துள்ளன.

மேற்படி விடயமாக பொது அமைப்புக்கள் மேலும் தெரிவிக்கையில்,

நவாலி தெற்கில் 50 இற்கும் மேற்பட்ட கால்நடைகள் எள்ளுப பயிர்களை அழித்த வண்ணம் உள்ளன. நவாலி விவசாயிகள் சம்மேளனம், கமநல சேவைகள் நிலையம், கால்நடை பிடிகாரர், பெரும்பாக அலுவலர், பிரதேச சபை என பலரும் இருந்தும் பிரயோசனமற்ற ஒன்றாகும்.

கால்நடைகளுக்கு எவரும் உரிமை கோராதநிலையுள்ளனர். வலி.தென்மேற்கு பிரதேச கட்டாக்காலி கால்நடைகளை பிடித்து ஏலத்தில் விட முன்வரவேண்டும. எனவே முதற்கட்டமாக கமநல பிரதி ஆணையாளர், பிரதேச சபைத் தவிசாளர், பிரதேச செயலர் ஆகியோர் இணைந்து கட்டாக்காலிகளை பிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளன. (92)

# புத்தாண்டுப் பரிசுப் பொருளாக மக்கள் வங்கியில் சுவர்க்கடிகாரம்

(யாழ்.நிருபர்)

மக்கள் வங்கியிடமிருந்து இம்முறை புத்தாண்டுப் பரிசாக பெறுமதிமிக்க சுவர்க்கடிகாரம் ஒன்று வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

ரூபா 5000 அல்லது அதற்கு மேற்பட்ட அனைத்து சேமிப்பு வைப்புக்களுக்கும் இந்தப் பரிசு உரித்தாகும்.

எதிர்வரும் புதன்கிழமை காலை 8.30 மணி முதல் அனைத்து மக்கள் வங்கிக் கிளைகளும் புத்தாண்டு கொடுக்கல் வாங்கல்களுக்காக திறந்திருக்கும் அன்றைய தினம் அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் ஒரு பரிசு வழங்கப்படும் என்றும் ரூபா ஐயாயிரம் அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை சேமிப்பு வைப்பிலிடுபவர்களுக்கு புத்தாண்டுப் பரிசாக அழகிய சுவர்க்கடிகாரம் ஒன்று வழங்கப்படும் என்றும் மேற்படி வங்கி அறிவித்துள்ளது. (10)

## முரசின் இன்றைய பலன்

(13.04.2015 திங்கட்கிழமை)

ஜய வருஷம் பங்குனி மாதம் 30 ஆம் திகதி.
நவமி திதி. அமிர்த சித்த யோகம்.
திருவோணம் நட்சத்திரம் பி.இ. 01.22 வரை. பின் அவிட்டம்.
இராகுகாலம் 07.36-09.06 வரை சுபநேரம் 12.06-01.36 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
காணிகளின் உறுதிகளிலும் மோசடிகள் தக்க வைத்து விடலாம்.

**ரிஷபம்**
நிலுவைகள் கூடியதால் தொடர்ந்தும் உதவி செய்ய பின்னடித்தல்.

**மிதுனம்**
நோயின் தாக்கத்தினால் நிகழ்வுக்குச் சமுகமளிக்காமை.

**கடகம்**
வெளியூர் மோகத்தினால் கவரப்பட்டு பணத்தை இழந்து விடல்.

**சிம்மம்**
பழையதை அழிப்பித்து புதிய மனை கட்ட வெளியூர் பணத்தை எதிர்பார்த்தல்.

**கன்னி**
தொலைபேசிப் பாவனையால் நிலுவைகளைப் பெறமுயற்சித்தல்.

**துலாம்**
வழக்கு விசாரணை புதிய திருப்பத்தை ஏற்படுத்தல்.

**விருச்சிகம்**
தற்காலிகப்பணி நிரந்தரமாக்கப்படும் செய்தி அறிதல்.


**தனுசு**
கணவரின் நடத்தையில் சந்தேகம் உறுதியானதால் மணவிலக்குப் பெற நிச்சயித்தல்.

**மகரம்**
பழைய சம்பவங்களை எண்ணி மனக்கவலை அடைதல்.

**கும்பம்**
விழிப்பாக இருந்தமையினால் திருட்டுப் போகாது வாகனம் காப்பாற்றப்படல்.

**மீனம்**
போதைப் பொருட்களை கைவிட்டு திருந்திவாழச்சபதமிடல்.

# பெங்களூருக்கு முதல் வெற்றி



(கொல்கத்தா)

கிறிஸ் கெய்லின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் பெங்களூர் றோயல்ஸ் சலஞ்சர்ஸ் அணி மூன்று விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

ஐ.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் ஐந்தாவது லீக் ஆட்டம் நேற்று முன்தினம் கொல்கத்தாவில் நடைபெற்றது. இதில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியும் கொல்கத்தா நைட் ரைட் ரைடர்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய கொல்கத்தா அணி கப்டன் கம்பீர் மற்றும் உத்தப்பா, ரசல் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் கொல்கத்தா அணி 20 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 177 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கப்டன் கம்பீர் 58, உத்தப்பா 35, பாண்டே 23, ரசல் 17 பந்துகளை எதிர்கொண்டு 41 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 178 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பெங்களூர் அணி முதலிரு விக்கெட்டுக்களையும் ஒரு முனையில் இழந்து தடுமாறியது. இருப்பினும் மறுமுனையில் அதிரடியில் கலக்கிய கிறிஸ் கெய்ல் அணி வெற்றியை நெருங்கும் வேளையில் ஆட்டமிழந்து சதமடிக்கும் வாய்ப்பையும் கோட்டைவிட்டார். நிறைவில் பெங்களூர் அணி 19 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் 56 பந்துகளை எதிர்கொண்ட கிறிஸ் கெய்ல் 96, டி வில்லியர்ஸ் 28, கப்டன் ஹோலி 13 ஓட்டங்களைப் பெற்றனர். இதன் மூலம் பெங்களூர் அணி முதல் வெற்றியைப் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. போட்டியின் ஆட்டநாயகனாக கெய்ல் தெரிவு செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் கிறிஸ் கெய்ல் 25 ஓட்டங்களைப் பெற்றவேளை அனைத்து விதமான ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டியில் 7000 ஓட்டங்களைக் கடந்த முதல் வீரர் என்ற சிறப்பைப் பெற்றார். இவர் இதுவரை 196 ருவென்ரி-20 போட்டிகளில் 13 சதம் உட்பட 7071 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். அடுத்த இரு இடத்தில் அவுஸ்ரேலியாவின் பிராட் ஹொட்ஜ் (233இல் 6363 ஓட்டங்கள்), டேவிட் ஹசி (248இல், 5822 ஓட்டங்கள்) உள்ளனர்.

# மக்கலம் சதம்; சென்னை பெரு வெற்றி

(சென்னை)

ஐ.பி.எல்., லீக் போட்டியில் பிரண்டன் மக்கலம் சதம் விளாச, சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 45 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

எட்டாவது ஐ.பி.எல். ருவென்ரி-20 தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகின்றது. இதன் 4ஆவது லீக் போட்டி சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் சென்னை, ஹைதராபாத் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சென்னை முதல் விக்கெட்டுக்காக 75 ஓட்டங்களைப் பெற்ற வேளை பிரிக்கப்பட்டது. ஒரு முனையில் அதிரடியாக ஆடிய பிரண்டன் மக்கலம் சதம் விளாச மறுமுனையில் கப்டன் டோனி அரைச் சதம் கடந்து அசத்தினார். இதன் மூலம் சென்னை அணி வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் சென்னை அணி 20 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரண்டன் மக்கலம் 56 பந்துகளை எதிர்கொண்டு 100 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார். மற்றும் கப்டன் டோனி 29 பந்துகளை எதிர்கொண்டு 53, ஸ்மித் 27 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 210 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஹைதராபாத் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்க்ளைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் வில்



லியம்ஸன் 26, டேவிட் வோர்னர் 5[illegible] தவான் 26, போபரா 22 ஓட்டங்களைப் பெற்றனர். போட்டியின் ஆட்டநாயகனாக மக்கலம் தெரிவு செய்யப்பட்டார்.

## இன்றைய ஆட்டம்

PEPSI IPL

பெங்களூர் எதிர் ஹைதராபாத்

இடம் : பெங்களூர்.

நேரம் : இரவு 8.00 மணி

# அதிரடியே என் பாணி



ஐ.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடர் தனக்கு அதிக பாடங்களை கற்றுக் கொடுக்கின்றது என . இலங்கை அணியின் சகலதுறை வீரரான திசர பெரேரா தெரிவித்துள்ளார்.

இவர் சமீபத்தில் நடைபெற்று முடிந்த உலகக்கிண்ணத் தொடரில் இலங்கை அணியில் இடம்பிடித்திருந்தார். தற்போது இந்தியாவில் நடைபெற்றுவரும் ஐ.பி.எல். தொடரில் பஞ்சாப் அணியில் விளையாடி வருகிறார்.

இது தொடர்பாக திசர பெரேரா கூறுகையில், ஐ.பி.எல். போட்டிகளில் வெளிநாட்டு வீரர்கள், அணித்தலைவர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் அதிகமாக உள்ளனர்.

இதன் மூலம் நாம் அதிக ஆலோசனைகளை அவர்களிடமிருந்து பெற முடியும். அதே சமயம் அதிகம் கற்றுக்கொள்ளவும் முடியும்.

மேலும் ருவென்ரி-20 மற்றும் 50 ஓவர் போட்டிகளில் அதிக ஆர்வம் உள்ளதாக தெரிவித்த பெரேரா, டெஸ்ட் போட்டிகளில் விளையாட விருப்பம் உள்ளதாகவும், அதிரடியை மட்டுமே எனது பாணியாகக் கொண்டிருக்கின்றேன். நெருக்கடியான வேளைகளிலும் இதே பாணியிலேயே விளையாட விரும்புகின்றேன். அதிலிருந்து மீள்வது கடினம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வெற்றியால் பெரு மகிழ்ச்சி



(சென்னை)

சகல வீரர்களதும் பொறுப்பான செயற்பாட்டின் மூலம் இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்ய முடிந்தது. இந்த வெற்றி பெரு மகிழ்வைத் தருகின்றது என சென்னை அணியின் பயிற்றுநர் ஸ்ரீபன் பிளமிங் மற்றும் கப்டன் டோனி மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர்.

இந்த வெற்றி குறித்து சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் பயிற்சியாளர் ஸ்ரீபன் பிளமிங் கூறியதாவது:

ஆரம்ப போட்டியில் சென்னை வீரர்களின் ஆட்டம் துருப் பிடித்த நிலையில் இருந்தது. இதனால் அனைத்து துறைகளிலும் முன்னேற்றம் காண வேண்டும் என்று நினைத்தேன். ஆனால், ஹைதராபாத் அணிக்கு எதிரான ஆட்டத்தில் சென்னை அணி மிகுந்த முன்னேற்றம் அடைந்தது. இது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. எந்தக் குறையும் இல்லாமல் சிறப்பான ஆட்டத்தை சென்னை அணி வெளிப்படுத்தியது. துடுப்பாட்டம் மிகுந்த ஆற்றல் மிக்கதாகவும், பொறுப்பாகவும் இருந்தது. மக்கலம் துடுப்பாட்டத்திலும், டிரெட் போலட் பந்து வீச்சுக்கும் இடையே சரியான போட்டி இருந்ததை இரசிகர்கள் வெகுவாகக் கண்டு களித்தனர். சென்னை அணியின் பந்து வீச்சும் சிறப்பாக இருந்தது. குறிப்பாக அஸ்வின் சிறப்பாக வீசினார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றி குறித்து சென்னை அணித்தலைவர் டோனி கூறுகையில், எங்கள் அணியின் அனைவருடைய துடுப்பாட்டமும் அருமையாக இருந்தது. சென்னையில் வெப்பம் அதிகமாக இருந்தது. இருந்தாலும், பிரண்டன் மக்கலமின் துடுப்பாட்டம் மிகச் சிறப்பாக இருந்தது.

எங்களது சொந்த மைதானம் இது என்பதால் இங்குள்ள சூழ்நிலையை நாங்கள் தெரிந்து கொண்ட நிலையில், இந்த வெற்றி முக்கியத்துவம் வாய்ந்தது. இது நல்ல முன்னேற்றத்தைக் கொடுக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

# சங்கமமான காதல் ஜோடி



(லண்டன்)

பிரிட்டன் நாட்டு ரென்னிஸ் வீரரான அண்டி முர்ரே, தனது ஒன்பது ஆண்டு கால பெண் தோழியான கிம் சியர்சை நேற்று முன்தினம் திருமணம் செய்து கொண்டார். காதல் புறாக்களின் திருமணம், முர்ரேவின் சொந்த நகரான டன்பிளேனில் உள்ள கதீட்ரல் தேவாலயத்தில் நடைபெற்றது. தம்பதியர் இருவரும் ஐ டு என்ற உறுதி மொழி கூறியபோது விழாவுக்கு வருகை தந்த விருந்தினர்களின் கர கோஷம் விண்ணைப் பிளந்தது.

45 நிமிட நேரம் நடைபெற்ற திருமண வைபவத்தை டன்பிளேன் நகரமே கண்டுகளித்தது. இருவரின் திருமண வரவேற்பு விழா மிகப்பிரமாண்டமான கிரோமிக்ஸ் ஹவுஸ் ஆடம்பர விடுதியில் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்


# செல்சியாவில் பிரேசில் வீரர் ஒப்பந்தம்

(ரியோ டி ஜெனிரோ)

இங்கிலாந்து கால்பந்து கிளப் அணியான செல்சியா, பிரேசில் நாட்டைச் சேர்ந்த 19 வயது நடுக்கள வீரர் நாதனை ஒப்பந்தம் செய்துள்ளது.

இதனால் நாதன் அடுத்த வாரம் மருத்துவ பரிசோதனைக்காக லண்டன் செல்வார் என்றும், அதன் பின்னர் நிரந்தர ஒப்பந்தத்தில் கையெழுத்திட வுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இதற்காக செல்சியா நாதனுக்கு 7 மில்லியன் யூரோ கொடுக்கிறது. அஸ்கர், பிலிபி லூயிஸ், ரமிரெஸ், வில்லியன் ஆகியோரை அடுத்து ஐந்தாவது பிரேசில் வீரராக நாதன் செல்சியாவில் இணைய உள்ளார்.



# பயிற்றுவிப்பாளர் அவதாரம் எடுப்பாரா? கங்குலி



இந்திய அணியின் புதிய பயிற்சியாளராக முன்னாள் கப்டன் கங்குலி நியமிக்கப்பட வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த 2011 முதல் இந்திய அணி பயிற்சியாளராக இருப்பவர், சிம்பாப்வேயின் டங்கன் பிளட்சர், (வயது-66). இவரது பயிற்சியில் இந்திய அணி 2013இல் சம்பியன்ஸ் ரொபி (மினி உலக கோப்பை) மட்டும் கைப்பற்றியது.

மற்றபடி, டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்திலிருந்து 7ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டது. சமீபத்தில் முடிந்த உலக கோப்பைத் தொடர் வரை மட்டும், பிளட்சரின் ஒப்பந்தம் நீடிக்கப்[illegible]ருந்தது.

இதனால், விரைவில் இந்திய அணிக்கு புதிய பயிற்சியாளரை நியமிக்கும் நட[illegible]கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்திய அணியின் இயக்குநராக உள்ள ரவி [illegible]ஸ்திரி, தற்போதைய பந்து வீச்சு பயிற்சியாளர் பரத் அருண் பெயரை பரிந்துரைத்தார்.

ஆனால், இந்திய அணியின் முன்னாள் கப்டன் கங்குலியை பயிற்சியாளராக்க, இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.,) தலைவர் டால்மியா மிகவும் விரும்புவதாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து பி.சி.சி.ஐ., நிர்வாகி ஒருவர் கூறியது: இந்திய அணியின் போராடும் திறனை ரவி சாஸ்திரி அதிகரித்தார். இவருக்குப் பயிற்சியாளர் பதவி மீது விருப்பம் இல்லை. தனக்குப் பதில் பாரத் அருண் பெயரை சிபாரிசு செய்தார். ஆனால், டால்மியா, கங்குலி மீது ஆர்வமாக உள்ளார். இதனால், கங்குலி, பயிற்சியாளராக அதிக வாய்ப்புள்ளது. பி.சி.சி.ஐ., தலைவர் டால்மியா கூறுகையில், யார் அடுத்த பயிற்சியாளர் என இப்போதே கூற முடியாது. இதுகுறித்து விவாதித்து வருகிறோம். விரைவில் அறிவிப்பு வெளியாகும் என்றார்.

விளையாட்டுச் செய்திகள்

# வடமராட்சி வலய மட்ட கரப்பந்தாட்டம்

## 3 பிரிவுகளில் அமெரிக்கன் மிஷன் கல்லூரி சம்பியன்

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டியில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணி மூன்று பிரிவுகளில் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் இரு பாலாருக்குமான கரப்பந்தாட்டப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

15, 17, 19 என மூன்று வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட இப்போட்டித்தொடரில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பிடித்துக் கொண்ட அணிகளின் விபரம் வலயக் கல்விப் பணிமனையினால் வெளியிடப்பட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு:

15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை தொண்டைமானாறு வீரகத்தி வித்தியாலய அணியும் பிடித்துக் கொண்டன.

17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை தொண்டைமானாறு வீரகத்தி வித்தியாலய அணியும் இரண்டாமிடத்தை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியும் பிடித்துக் கொண்டன.

19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணியும், இரண்டாமிடத்தைதொண்டமைமானாறு வீரகத்தி வித்தியாலய அணியும் மூன்றாமிடத்தை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியும் பிடித்துக்கொண்டன.

15 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை சென். தோமஸ் றோ.க. வித்தியாலய அணியும், இரண்டாமிடத்தை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும் பிடித்துக் கொண்டன.

17 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணியும் இரண்டாமிடத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும், மூன்றாமிடத்தை சென். தோமஸ் றோ.க. வித்தியாலய அணியும் பிடித்துக் கொண்டன.

19 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும், இரண்டாமிடத்தை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் பிடித்துக்கொண்டன. (93)

## மாவட்ட பெருவிளையாட்டு விரைவில் நிரலிடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டு விழா எதிர்வரும் 22ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இப்போட்டிக்கான நிரலிடல் தயாரித்தல் எதிர்வரும் 18ஆம் திகதி யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பெரு விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொள்ளவுள்ள சகல பாடசாலைகளின் ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (93)

## சுதேசிய கொண்டாட்ட கரப்பந்தாட்டம் ஆவரங்கால் இந்து, வசந்தசிறி வசம் கிண்ணம்





(அரியாலை)

சுதேசிய கொண்டாட்ட கரப்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணங்களை ஆவரங்கால் இந்து இளைஞர் மற்றும் சண்டிலிப்பாய் வசந்தசிறி அணிகள் கைப்பற்றிக் கொண்டன.

96ஆவது சுதேசிய கொண்டாட்ட விளையாட்டு விழா அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

ஏ, பி பிரிவு அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

ஏ பிரிவுக்கான இறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும் புத்தூர் கலைமதி அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 3-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

பி பிரிவுக்கான இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் வசந்தசிறி அணியும் இளவாலை மத்தி அணியும் மோதின. இதில் இரு அணிகளும் சமபலம் கொண்ட அணிகளாக மோதியபோதிலும் சண்டிலிப்பாய் வசந்தசிறி அணி செட்களைக் கைப்பற்றிய வண்ணமிருந்தது. நிறைவில் சண்டிலிப்பாய் வசந்தசிறி அணி 3-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. (93)

## கூடைப்பந்தில் தொடர்ந்து அசத்தும் கே.கே.எஸ். ஐக்கியம், சென்றலைட்ஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் நடாத்திய மாபெரும் கூடைப்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணங்களை யாழ். சென்றலைட்ஸ் மற்றும் காங்கேசன்துறை (கே.கே.எஸ்.) ஐக்கிய அணிகள் கைப்பற்றிக் கொண்டன.

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் அதன் அங்கத்துவ அணிகளுக்கிடையில் நடாத்திய மாவட்ட மட்ட கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் இரவு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

ஆண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் யாழ். ஜொலிஸ்ரார் அணியும் யாழ். சென்றலைட்ஸ் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் மோதிக் கொண்டதால் இப்போட்டி பார்வையாளர்களைப் பெரும் பரவசத்தில் ஆழ்த்தியிருந்தது இருப்பினும் இறுதி நேரத்தில் தீரத்துடன் செயற்பட்ட யாழ். சென்றலைட்ஸ் அணி 46-45 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற பெண்களுக்கான இறுதிப் போட்டியில் காங்கேசன்துறை ஐக்கிய அணியும் யாழ். பமிலியன்ஸ் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே காங்கேசன்துறை ஐக்கிய அணி புள்ளிகளைப் பெற்றவண்ணமிருந்தது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் பமிலியன்ஸ் அணி செயற்பட்டபோதிலும் அது வெற்றிக்கான புள்ளிகளாக அமையவில்லை. நிறைவில் காங்கேசன்துறை ஐக்கிய அணி 45-25 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெகன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மேலும் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத் தலைவர், துறைசார்ந்தோர், விளையாட்டு ஆர்வலர்கள், இரசிகர்கள், ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டு வீர,வீராங்கனைகளை உற்சாகப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (93)

## தண்ட உதையில் வென்றது யங்ஹென்றீஸ்

(அராலி)

அராலி அண்ணா விளையாட்டுக்கழகம் நடாத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டி ஒன்றில் இளவாலை யங்ஹென்றீஸ் அணி வெற்றிபெற்றுள்ளது. வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அராலி அண்ணா விளையாட்டுக்கழகம் நடாத்திவரும் அணிக்கு ஏழு பேர் கொண்ட கால்பந்தாட்டத் தொடர் மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற போட்டியில் இளவாலை யங்ஹென்றீஸ் அணியும் இளவாலை சென். லூட்ஸ் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளாலும் இறுதி வரையும் கோல் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. நிறைவில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் இளவாலை யங்ஹென்றீஸ் அணி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்தும் போட்டிகள் நடைபெற்று வருவதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

## கரப்பந்து இறுதி ஆட்டம் கருகம்பனையில் இன்று

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை கருகம்பனை தமிழ் மன்ற சனசமூக நிலையத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும் புத்தாண்டை முன்னிட்டும் நடாத்திய கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப்போட்டி இன்று இரவு 7 மணிக்கு மின்னொளியில் சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டித் தொடரில் ஆவரங்கால் மத்தி, ஆவரங்கால் இந்து இளைஞர், புத்தூர் கலைமதி, சண்டிலிப்பாய் வசந்தசிறி, இளவாலை மத்தி, மல்லாகம் நியூ வொறியர்ஸ் ஆகிய அணிகள் மோதவுள்ளன. லீக் சுற்று முறையில் முதல் சுற்று ஆட்டங்கள் நடைபெறவுள்ளதாகவும், இதன் முடிவில் கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் இரு அணிகள் இறுதிப் போட்டிக்குத்தகுதி பெறும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)



**யாழ். மாவட்ட ஹொக்கி சங்கம் நடாத்திய மாவட்ட மட்ட ஹொக்கிப் போட்டியில் வட்டுக்கோட்டை ஓல்ட்கோல்ட் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. அண்மையில் சென். ஜோண்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியை ஓல்ட்கோல்ட் அணி வீழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. கிண்ணம் வென்ற ஓல்ட் கோல்ட் அணி விருந்தினர்களுடன் இருப்பதைக் காணலாம். (90)**

# வயது வந்தவர்கள் பால் அருந்துவது பாதுகாப்பானதா?

சி. சிவன்சுதன்
மருத்துவ நிபுணர்
யாழ்.போதனா வைத்தியசாலை



பெரியவர்கள் பால் அருந்துவது ஆபத்தானது என்ற ஒரு தப்பான அபிப்பிராயம் பலரிடையே காணப்படுகிறது. இந்தத் தவறான மனப்பதிவு காரணமாகப் பால்குடிப்பதை நிறுத்தியவர்கள் பலர். "நான் பயந்து பால் குடிப்பதில்லை" என்று சொல்லிப் பெருமைப்பட்டுக்கொள்பவர்கள் பலர். வீட்டிலே ஆடு, மாடுகளும் போதிய பாலும் உள்ளவர்கள்கூட அந்தப் பாலை விற்றுவிட்டு சத்துமா என்றும் ஆடை நீக்கிய பால்மா என்றும் அதிகவிலை கொடுத்து வாங்கிக் கரைத்துக் குடிக்கும் பரிதாப நிலை இங்கு காணப்படுகிறது. எம்மிடையே பால் ஆபத்தானது என்ற உணர்வினை ஏற்படுத்தியவர்கள் யார்?

இயற்கையாகக் கிடைக்கக்கூடிய அதிகூடிய ஊட்டச்சத்துள்ள உணவு பால் ஆகும். சிறியவர்கள் முதல் வயது முதிர்ந்தவர்கள் வரை அனைவருமே பால் அருந்துவது மிகவும் நல்லது. மேலைத்தேச உணவுவகைகளுடன் ஒப்பிடும்போது எமது உணவில் புரதப்பற்றாக்குறை ஒரு பெரும் பிரச்சினையாக இருந்துவருகிறது.

இந்தப் புரதப்பற்றாக்குறையை பால் அருந்துவதன் மூலம் ஓரளவேனும் நிவர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும். ஓர் ஆரோக்கியமான உணவில் சக்திப்பெறுமானத்தின் அடிப்படையில் 30 வீதம் வரை கொழுப்பு சேர்த்துக்கொள்ள முடியும். ஆனால் எமது சராசரி உணவிலே ஏறத்தாழ 15 வீதமான கொழுப்பே இருக்கிறது. எனவே பால் அருந்துவதன் மூலம் உள்ளெடுக்கப்படும் மேலதிகக் கொழுப்பை நினைத்துப் பயப்படவேண்டிய அவசியம் இல்லை.

சோடா குடிக்கப் பயப்படாதவர்கள், சிகரெற் மற்றும் குடிவகைகளைக் குடிக்கப் பயப்படாதவர்கள், சீனி சாப்பிடப் பயப்படாதவர்கள், சொக்லேற், கண்டோஸ் என்பன சாப்பிடப் பயப்படாதவர்கள், உடற்பயிற்சி செய்யாமல் "சும்மா" இருக்கப் பயப்படாதவர்கள் பால் குடிக்க மட்டும் பயந்து நடுங்குவதன் மர்மம் ஒரு புரியாத புதிராகவே இருக்கிறது.

பால் என்ற இயற்கையான, அற்புதமான, இந்தப் பானத்தில் தராதரம் கூடிய புரதம், போதியளவு விற்றமின்கள், கனியுப்புக்கள், மாப்பொருள், கொழுப்பு என அனைத்து ஊட்டச்சத்துக்களும் அடங்கி இருக்கின்றன. இதனை ஓர் அதிசிறந்த நிறை உணவு என்று சொல்லுவார்கள். இது ஆபத்தான உணவு என்று பெயர் எடுத்தது எப்படி?

மேலைத்தேச நாடுகளில் சொல்லப்படும் உணவுக்கட்டுப்பாட்டு முறைகள் அனைத்தும் எமது மக்களுக்குப் பொருந்தாது. எமது உணவு முறைக்குப் பழக்கப்பட்ட அனைவரும் போதுமான அளவு பால் குடிப்பது பாதுகாப்பானது மாத்திரமல்ல உடல் சுகாதாரத்திற்கு மிகவும் நல்லது. நீரிழிவு, குருதியமுக்கம், கொலஸ்ரோல் நோய் உள்ளவர்கள் கூட பால் குடிப்பது நல்லது. ஆடை நீக்கிய பால்மா வகைகளை மட்டும்தான் குடிக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை.

(நன்றி: Jaffna Diabetic Cen[illegible])

---

# கே.வி. மகாதேவன்

68



- பி.ஜி.எஸ்.மணியன் -

இளம் இயக்குநர்களும் விரும்பப்படும் இசை அமைப்பாளராக கே.வி.மகாதேவன் இருந்தார் என்பதற்கு சாட்சியாக அமைந்த படங்கள் ஆர். சுந்தரராஜனின் இயக்கத்தில் வெளிவந்த "அந்த ராத்திரிக்கு சாட்சி இல்லை" "தூங்காத கண்ணின்று ஒன்று" ஆகியவை.

"எதிர்பார்த்தேன் இளங்கிளியைக் காணலையே" (அந்த ராத்திரிக்கு சாட்சி இல்லை) - விரகதாபத்தை குரலில் தேக்கி எஸ்.பி.பியைப் பாடவைத்தார். இணைப்பிசையே இசை அமைத்தவர் "மாமா"தான் என்று காட்டிக்கொடுத்துவிடும்.

"நீ அழைத்ததுபோல ஒரு ஞாபகம்" தூங்காத கண்ணின்று ஒன்று படத்தின் உச்ச கட்ட காட்சியில் இடம் பெற்ற இந்தப் பாடலுக்கு மகாதேவன் அமைத்த இசைக் காட்சிக்கே உயிர் கொடுத்தது.

"அலைபாயுதே" பாணியில் யாருக்கும் தெரியாமல் தாலிகட்டிக்கொண்ட கணவனைக் காண சென்னைக்கு ரயிலில் விரைகிறாள் மனைவி. அதேசமயம் ஒரு படத்துக்கு கதை எழுதும் வாய்ப்பை பெற்று தனது லட்சியத்தில் வெற்றி பெற்ற பூரிப்பில் அவளைக் கண்டு அழைத்துப் போக எதிர் ரயிலில் பயணிக்கிறான் அவன். தவறுதலாக ரயில் புறப்படும் அவசரத்தில் முதல் வகுப்புப் பெட்டியில் ஏறிவிட்ட அவளை அந்தப் பெட்டியில் இருந்த நான்கு காமுகர்கள் பாலியல் பலாத்காரம் செய்கிறார்கள். தனது பெண்மையை இழந்த அவள் ரயிலிலிருந்து குதித்து தற்கொலை செய்துகொள்கிறாள். எதிரே வரும் அவளது நாயகன் பயணிக்கும் ரயில் அவளைச் சிதைத்து சின்னாபின்னமாக்குகிறது.

நாயகியின் நினைவால் ரயிலில் பாடிக்கொண்டு வருகிறான் அவன். அவனது பாடலும், அவள் சூறையாடப்படுவதும் இணைக்கப்பட்ட காட்சி.

இந்தப் பாடலுக்கு "தர்மவதி" ராகத்தில் அற்புதமாக இணைப்பிசையில் மகாதேவன் காட்சியின் கொடூரத்தை படத்தைப் பார்க்காமலே இசையால் நம்மை உணரவைக்கிறார். படத்தோடு பார்க்கும் போதோ இணைப்பிசை நம்மைப் பதற வைக்கிறது.

இப்படி எல்லாம் இசை அமைக்க கே.வி.மகாதேவனால் மட்டுமே முடியும் என்று அப்போது நுழைந்த - ஏற்கெனவே இருந்துகொண்டிருந்த இசை அமைப்பாளர்களுக்கு சவால் விடுவது போல ஈடுகொடுத்தார் கே.வி. மகாதேவன்.

1984-இல் மகாதேவனின் இசையில் வெளிவந்தது நடிகர் திலகம் சிவாஜி கணேசன், கே.ஆர்.விஜயா, பிரபு, ராதா, ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்த "சிம்ம சொப்பனம்". சிவாஜி கணேசனின் மார்க்கெட்டில் சரிவு ஏற்பட்ட நேரத்தில் வெளிவந்த காரணத்தால் படமும் எடுபடவில்லை. பாடல்களும் அப்படியே.

இப்படி கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுகளுக்கும் மேலாக படவுலகில் சுறுசுறுப்பாக இயங்கி வந்த வேளையில்... கே.வி. மகாதேவனை திடீரென்று பக்கவாதம் வந்து தாக்கியது.

உடலின் ஒரு பகுதி செயலிழந்து போய்விட்ட நிலையில் படுக்கையில் விழுந்தது அந்த இசைச் சிம்மம்.

ஞாபக சக்தியும் கிட்டத்தட்ட மங்கியே போய்விட்டது. தான் பெற்ற மகனைக் கூட அடையாளம் காணமுடியாத நிலை.

அந்த நேரத்தில் தன் மனைவி எம்.என். ராஜத்துடன் அவரைப் பார்க்க வந்தார் பின்னணிப் பாடகர் ஏ.எல். ராகவன். தனது பெயருக்கும் புகழுக்கும் பெருமளவு காரணகர்த்தா என்ற் நன்றியை மறக்காத ஏ.எல். ராகவனுக்கு மகாதேவனைப் பார்க்க வந்தபோது சிறு தயக்கம்.

"சொந்த மகனையே மறந்துபோன நிலையிலே இருக்காராம் மாமா. நம்மை எல்லாம் எப்படி நினைப்பிலே வைச்சிருக்கப்போறார்.? அவரைப் பார்த்திட்டு வந்தா அதுவே போதும்" இந்த நினைப்போடு அமைந்தகரையில் இருந்த மகாதேவனின் வீட்டுக்குள் நுழைந்தார் அவர்.

படுக்கையில் விழுந்து கிடந்த கே.வி.மகாதேவனின் அருகில் நெருங்கினார்.

யாரோ வந்திருப்பதை உணர்ந்து திரும்பிய கே.வி. மகாதேவன் ஏ.எல். ராகவனைப் பார்த்ததுதான் தாமதம்.

"டே. ராகவா" - என்று பெரிதாகக் குரலெடுத்துக் கூவிய அந்தப் பெரியவரின் கண்களில் பெருக்கெடுத்த கண்ணீர் கன்னங்களில் வழிந்தது.

நிலவு - தூரத்திலிருந்து பார்க்கும்போது ஒளிமயமான மனதைக் கொள்ளைகொள்ளும் - குளிரவைக்கும் - ஒரு பொருள். அதையே அருகில் சென்று பார்த்தால் கற்பாறைகள் நிறைந்த கரடுமுரடான ஒரு கிரகம். பெரும்பாலான பெயரும் புகழும் ஒருங்கே இணைந்த மனிதர்களின் வாழ்வும் இப்படித்தான். நம்மை வியக்க வைக்கும் அந்த மாமனிதர்களின் சொந்த வாழ்வோ நாம் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத சோகங்களின் சங்கமமாக இருக்கும்.

இந்த விதிக்கு கே.வி.மகாதேவனும் விலக்கல்ல.

ஒரு சாதனையாளர் என்ற அளவில் நம்மை எல்லாம் பிரமிக்கவைத்த அந்த மாமனிதர் தனது சொந்த வாழ்வில் எதிர்கொண்ட சோதனைகளும் சோகங்களும் - இத்தனை சோகங்களையும் மனதில் கொண்ட ஒரு மனிதரா இப்படியெல்லாம் சாதித்தார் என்று வியக்கவைக்கும்.

லக்ஷ்மி என்ற மாதரசியைக் கைபிடித்தார் கே.வி.மகாதேவன். இருவரும் கருத்தொருமித்த தம்பதிகளாகவே வாழ்ந்துவந்தனர். ஆனால் எப்படியோ அவரது மனம் இன்னொரு பெண்ணிடமும் காதல் வயப்பட்டது. அவரை இரண்டாவதாக மணமும் புரிந்து கொண்டார் அவர். அவர்தான் திருமதி. லீலா மகாதேவன் என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்டவர்.

அந்த நாளைய சென்னை வானொலி நிலைய நாடகங்களைக் கேட்டு இரசித்து வந்தவர்களுக்கு லீலா மகாதேவனின் கணீரென்ற குரல் மறக்கவே மறக்காது. திரைப்படங்களுக்கும் பின்னணிக்குரல் கொடுத்து வந்தார் அவர். சிவாஜி கணேசன் நடித்து இயக்குநர் ஸ்ரீதர் இயக்கிய சிவந்த மண் படத்தில் நடிகர் திலகத்தின் தாயாராக நடித்த சாந்தகுமாரி உச்ச கட்ட காட்சியில் "திவான்" என்று ஆக்ரோஷம் கொப்பளிக்க வில்லன் எம்.என். நம்பியாரிடம் பேசுவாரே.. அந்த கணீரென்ற குரலுக்கு சொந்தக்காரர் லீலா மகாதேவன் தான். கே.வி.மகாதேவனைக் கரம் பிடித்து இரண்டாவது மனைவியாக அவரது வீட்டுக்குள் நுழைந்தார் அவர். இரண்டு மனைவியரோடும் ஒரே வீட்டில் கருத்தொருமித்தே வாழ்ந்து வந்தார் கே.வி. மகாதேவன்.

ஆனால் விதி செய்த சதி என்றே கூறவேண்டும். லீலா-மகாதேவன் தம்பதியினருக்கு பிறந்த ஒரே [illegible]னுக்கு சித்தஸ்வாதீனம் இல்லாத நி[illegible] அந்த மகன் இருபத்தொரு வயதில் [illegible] சமயம் வீட்டை விட்டு காணாமற் போனார்.

பின்னாளில் வயது முதிர்ந்துகொண்டிருக்கும் போது திருமதி. லீலா மகாதேவனை எண்பதுகளின் இறுதியில் புற்றுநோய் தாக்கியது. நோய் முற்றியநிலையில் காதல் கணவரை தவிக்க விட்டுவிட்டு காலமானார் அவர்.

(தொடரும்)



# சிங்கத்துடன் உலா வரலாம்!



மொரீஷியஸ் நாட்டின் மேற்கு முனையருகே, 1,000 ஏக்கர் பரப்பளவில், கேசெல்லா என்ற இயற்கைப் பூங்கா ஒன்று அமைந்துள்ளது. இங்கு, வெள்ளைச் சிங்கம், சிறுத்தை, புலி, காட்டுப்பூனை, ஒட்டகச் சிவிங்கி, ராட்சச ஆமை மற்றும் நீண்ட வால் குரங்கு போன்ற விலங்குகளும், 1,500 வகையான பறவைகளும் உள்ளன.

இந்த இயற்கைப் பூங்காவின் மற்றொரு சிறப்பு என்னவென்றால், சிங்கங்களுடன் கை கோர்த்தபடி நடக்கலாம் அவற்றின் மீது ஏறி, சவாரியும் போகலாம்.

அத்துடன், நன்கு பழக்கப்படுத்தப்பட்ட இரு சிங்கங்களுடன் இரு பயிற்சியாளர்கள் பின் தொடர, அவர்களுக்குப் பின், 11 சுற்றுலாப் பயணிகள் வரை அணிவகுத்து செல்லலாம்.

ஒவ்வொருவருக்கும் ஒரு தடி கொடுக்கப்படும். தடி வைத்திருப்போரை சிங்கம் நெருங்காது; தொந்தரவும் தராது. வழியில், இச்சிங்கங்கள் மரத்தில் ஏறும் ஒன்றை ஒன்று கொஞ்சும் திடீரென, படுத்துக் கொள்ளும். இச்சமயங்களில், சுற்றுலாப் பயணிகள் அவற்றின் அருகில் நின்று புகைப்படம் எடுத்துக் கொள்ளலாம் தொடலாம் எதுவும் செய்யாது.

- இச்சிங்கங்களுடன் ஒரு மணி நேரம் உலா வர, 8,500 ரூபாய் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.
- நுழைவுக் கட்டணம், 1600 ரூபாய் தனி.
- இப்பூங்காவுக்குள் நாள் முழுவதும் பொழுதைக் கழித்து, அனைத்தையும் இரசிக்கலாம். அத்துடன், குழந்தைகள் விளையாட தனி இடமும் உண்டு.
- இங்கு, சிங்கம் மட்டுமல்ல; புலி சவாரியும் உண்டு.
- இத்தகைய சவாரிகளுக்கு, 15 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மட்டுமே அனுமதி.
- காலை, 9:00 மணி முதல் மாலை, 5:00 மணி வரை பூங்கா திறந்திருக்கும்.
- கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு நாட்களில் மட்டுமே விடுமுறை.

# பிச்சைக்காரர்கள்




“கோடை விடுமுறை வரப் போகிறதே... உனக்கு பரீட்சை முடிந்து விட்டதா?”

“பரீட்சை நடந்து கொண்டிருக்கிறது; அடுத்த வாரத்திலிருந்து விடுமுறை...”

“எங்களுக்கும் அதற்கு அடுத்த வாரம் விடுமுறை...”

“விடுமுறையின் போது என்ன செய்யப் போகிறாய்?”

“பிச்சை எடுக்கப் போகிறேன்...”

“பிச்சை எடுக்க போகிறாயா... என்ன சொல்கிறதய்...”

“பையிலே ஒரு சதமும் இல்லாமல் கிளம்பப் போகிறேன்; பிச்சை எடுத்து சாப்பிடுவேன். விடுமுறை சுவாரஸ்யமா இருக்கும் என்பதோடு பல ஊர்களையும் பாக்கலாம்...”

“யாரும் பிச்சை போடாட்டில் என்ன செய்வது... பட்டினி கிடக்க முடியுமா?”

“பிச்சைக்காரர்கள் யாராவது பட்டினி கிடந்து இறந்ததாக கேள்விப்பட்டிருக்கிறாயா?”

“இல்லை...”

“அவர்களைப் போன்ற சுதந்திரமான, சந்தோஷமான மனிதர்கள் உலகத்திலேயே கிடையாது; மூன்று ஆண்டு பிச்சைக்காரனா இருந்துவிட்டால் பிறகு அமைச்சர் பதவி கிடைச்சாலும் பிடிக்காது என்கிற பழமொழி. அது எவ்வளவு உண்மை தெரியுமா...”

“உனக்கு எப்படித் தெரியும்?”

“ஒரு ஆண்டு பிச்சையெடுத்த அனுபவம் எனக்கு இருக்கு; நீயும் வருகிறாயா?”

- பிச்சை எடுக்க அழைத்த இளைஞர், சீன அறிஞர் சியாவ் யூ; மற்றவர், மாணவராக இருந்த மா-சே-துங்.

1916ஆம் ஆண்டில் இருவருமாக சேர்ந்து மத்திய சீனாவில், ஹீனன் மாகாணத்தில் ஒரு மாதம் பிச்சையெடுத்தபடியே சுற்றுப் பயணம் மேற்கொண்டனர்.

**(சியாவ் யூ எழுதிய, 'மா-சே-துங்கும், நானும்' நூலிலிருந்து)**

# ஆழ்ந்த நித்திரைக்கு...

- தேனோடு நெல்லிக்காயை ஊறவைத்துச் சாப்பிட்டு வந்தால் தூக்கமின்மை நீங்கும்.
- தினமும் மதிய உணவில் அரைக்கீரையைச் சேர்த்து வந்தால் இரவில் நன்றாகத் தூக்கம் வரும்.
- வாழைப்பழத்தோடு தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் நன்றாகத் தூக்கம் வரும்.
- சிறிய வெங்காயத்தை நெய்விட்டு வதக்கி உண்டு வந்தால் நன்கு தூக்கம் வரும்.
- பூசணிக்காயைப் பருப்போடு சேர்த்து அடிக்கடி சமைத்துச் சாப்பிட்டு வந்தால் நன்றாகத் தூக்கம் வரும்.
- பச்சை வெங்காயத்தை உண்டு வந்தாலும் நன்றாகத் தூக்கம் வரும்.
- கசகசாவை சிறிது தண்ணீர் விட்டு நன்றாக அரைத்து பாலில் கலந்து சாப்பிட்டு வந்தாலும் தூக்கம் வரும்.
- தினமும் இரவு தூங்குவதற்கு முன் இரண்டு வாழைப்பழங்களைத் தொடர்ந்து சாப்பிட்டுவர உடல் சூடு தணிந்து நன்றாகத் தூக்கம் வரும்.



# சுந்தர ராமசாமியை விட நகுலன்தான் மிக முக்கியமான எழுத்தாளர் 1

எம்.டி. முத்துக்குமாரசாமி -

என்னுடைய எம்.ஏ.வுக்கான தீஸிஸ்ஸாக ஜேம்ஸ் ஜாய்ஸினுடைய “யுலிஸஸ்” நாவலை எடுத்துக் கொண்டிருந்தேன். ஜேம்ஸ் ஜாய்ஸைப் படிப்பது எனக்கு விருப்பமான ஒன்றாக இருந்தது. அப்போது என் மனநிலை நனவோடை எழுத்து முறை, எக்ஸிஸ்டென்ஷியலிஸம் இந்த இரண்டினாலும் கவரப்பட்டிருந்தது. அந்த மனோ நிலைக்கு ஏற்ப ஒரு கதையை நான் தமிழில் எழுத வேண்டுமென நினைத்தேன். ஜேம்ஸ் ஜாய்ஸ் எனக்கு ஆதர்சமான எழுத்தாளராக இருந்த அதே வேளையில் ஸில்வியா பிளாத்தின் மீதும், அவருடைய மரணம், அவருடைய வாழ்க்கை, அவருடைய கவிதைகள் மீதும் பெரிய ஈடுபாடும் எனக்கு இருந்தது.

“ஸில்வியா பிளாத்” நிறைய கவிதைகள் எழுதி இருக்கிறார். “பெல்ஜார்” என்ற ஒரு நாவலைக் கூட எழுதி இருக்கிறார். ரொம்பவும், சென்சிட்டிவ்வான கவித்துவ மனநிலை அவருடையது. இப்படி நிறைய எழுதிக் கொண்டிருந்தாலும், திடீரென்று எழுத முடியாத சூழ்நிலையில் அது எப்படி ஒரு திருப்பமானதாக மாறி அவருடைய வாழ்க்கையை எப்படி துயரமான முடிவுக்கு இட்டுச் சென்றது என்பதை யோசிக்கும் போது, ஸில்வியா பிளாத்தின் மேல் எனக்கு அபூர்வமான பிரியம் ஏற்பட்டது. அந்த பிரியத்தை எப்படி என்று என்னால் சொல்ல முடியவில்லை. “எழுதுவதால் உயிர் வாழ்கிறேன் என்பதோடு எழுத முடியாமல் போகும்போது உயிரே போய் விடுகிறது” என்கிற தன்னிலை, ஸில்வியா பிளாத்திடம் இருப்பதை நான் உணர்ந்தேன்.

எனக்கு ஜேம்ஸ் ஜாய்ஸ் போல பக்கம் பக்கமாக எழுதக் கூடிய (யுலிஸஸ் நாவல் கூட 600 பக்கங்கள்) ஓர் ஆளுமையின் மீது ஈர்ப்பு இருந்த அதே சமயத்தில் ஸில்வியா பிளாத் மாதிரியான ஒருவர் எப்படி எழுத முடியாமல் தவித்துக் கொண்டிருந்தார் என்ற மனோநிலையின் மீதும் பற்று இருந்த காரணத்தினால் என்னுடைய புனைபெயரை “ஸில்வியா” என்று வைத்துக் கொண்டேன்.

என்னுடைய படைப்புகளில் வடிவங்களின் மீதுதான் நான் ஆர்வமானவனாக இருந்தேன். தொடர்ந்து சிறுகதை வடிவங்களை எப்படி முழுமையாக மாற்றுவது, ஒரு பதற்றத்திற்கு ஆளான, அமைதியற்ற, பிளவுபட்ட, ஒரு இலக்கற்ற ஓரிடத்திலிருந்து அதை படைப்பின் ஆதார மையமாக வைத்து நீங்கள் என்ன மாதிரியான படைப்பைப் படைப்பீர்கள் என்று பார்க்கும் போது, நேர்கோட்டில் கதை சொல்வது என்பது எனக்கு சாத்தியமற்றுப் போனது. அதையே என்னுடைய பலமாகவும் கருதுகிறேன். “நான்-லீனியர் ரைட்டிங்”தான்,. என்னால் எழுத முடியும் என்பதும் தெரியவந்தது. அப்போது தொடர்ந்து இலக்கிய உலகமும் சரி, அரசியல் உலகமும் சரி சுத்தமாக வாழ்வதற்கான லட்சியமேயற்ற எதிலும் அபிப்பிராயமேயற்ற மனோ நிலையில்தான் இருந்தது. நானும் அவ்வாறே இருந்தேன். இதை நம்பிக்கையற்ற வெளி என்று நான் சொல்லமாட்டேன். நம்பிக்கையோடு கூடிய ஆனால், அதேசமயத்தில் ஒரு பதற்றமான நிலையில் இருக்கக்கூடிய, மனோ நிலையின் வடிவம் என்ன என்பதை





ஒவ்வொரு கதையிலும் செய்து பார்த்திருக்கிறேன். நான் ஒவ்வொரு கதையையும் வேறுவேறு வடிவத்தில்தான் எழுதி இருக்கிறேன். ஒரே வடிவத்தில் இதுவரை நான் இரண்டு கதைகளை எழுதியதில்லை.

இதை பிரக்ஞை பூர்வமாக நடக்கின்ற செயற்பாடு என்று நான் சொல்லமாட்டேன். ஏனென்றால் நான் கதை எழுதும்போது திருப்பி திருத்தித் திருத்தி எழுதினதே கிடையாது. ஒரு தடவை என்ன எழுதினேனோ அதே தான். இதனால் பல நேரங்களில் சும்மா இருப்பதேதான் என்னுடைய படைப்பியக்கமே தவிர, நிறைய எழுதுவதில் இல்லை.

மனதிற்குள் ஒரு கதையின் முழு வடிவமும் சிதறலாகவே சேர்ந்திருப்பதை அதை அப்படியே எழுதி விடுவது என் நடைமுறையாக இருந்திருக்கிறது. இதனால் என்ன ஆனதென்றால், ஆசைப்பட்ட அளவுக்கு எழுத முடிவதில்லை. படிக்கின்ற அளவுக்கு எழுதுவதில்லை. இந்த நிலைகள்தான் என்னிடம் தொடர்ந்து இருக்கின்றன.

நவீன எழுத்தாளர்கள், பின் நவீன எழுத்தாளர்கள் எல்லோருமே நாட்டுப்புறக் கலைகளில் இருந்துதான் தங்களுடைய போஸ்ட் மார்டனிஸ்ட் மொழியை உருவாக்குகிறார்கள். மிலோரட் பாவிக்கின் எழுத்துக்களில் செர்பிய நாட்டுப்புற கதைகளும், புராணங்களும் மறு உருவாக்கம் பெறுகின்றன என்றால், மார்க்குவெஸ்ஸின் படைப்புகளில் கொலம்பிய நாடோடிக் கதைகளும், பாடல்களும் புது வடிவம் பெறுகின்றன.



போஸ்ட்மாடர்னிஸ சிந்தனையாளர்கள் கலைகளை உயர்ந்த கலை, தாழ்ந்த கலை என்றெல்லாம் வகைப்படுத்துவதில்லை. இலக்கியம் என்பது ஒருவகை மொழி விளையாட்டு; அறிவு சார்ந்த உரையாடல்களில் வெளிப்படுகின்றன உண்மைகள். இவை வாசிப்பின் காலகட்டத்தினாலும், வாசக கருத்தியலினாலும் உருவாக்கப்படுகின்றனவே அன்றி எழுத்தாளனால் அல்ல.

அதனால்தான் என்னுடைய படைப்புகளில் உயரிய லட்சியங்களின் கருத்தாக்கம் இருக்கின்ற போதே அதன் கூடவே ஒரு கீழ்த்தரமான விஷயமும் ஒத்த நேரத்தில் கூடவே இருக்கும். இப்படிப் பல புள்ளிகள் இணைகின்ற சிந்தனைகள் எனக்குக் கிடைத்தன. இவற்றிலிருந்துதான் எனக்கான இலக்கியப் பாதையை நான் வகுத்துக் கொண்டேன்.

வில்லியம் ஃபாக்னர், காஃப்கா, மார்க்குவெஸ், பாவிக், போர்ஹே, பார்த்தல்மே, கோர்த்தசார் என பலரை வரித்துக்கொண்டேன் என்று சொல்லலாம்.

(தொடரும்)

# நிகழ்வுகளின் பதிவுகள்....


வல்வை சிவன் கோவில் தீர்த்தத் திருவிழா அண்மையில் நடைபெற்றபோது சுவாமி இடப வாகனத்தில் பக்தர்களுக்குக் காட்சி தருவதைக் காணலாம்.





வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் நடாத்தப்பட்ட கண்காட்சியில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பொருட்களையும் பரிசு வழங்கப்படுவதையும் காணலாம். (137)







தொல்புரம் சக்தி முன்பள்ளியின் கால்கோள் விழா தொல்புரம் சக்தி முன்பள்ளியில் இடம் பெற்றபோது மழலைகள் மேலைத்தேய கருவிகள் முழங்க அணிவகுப்பு மரியாதை இடம்பெறுவதையும் சிறுவர் நிகழ்வினையும் காணலாம். (160)





தொல்புரம் மாதர்சங்கத்தினரால் தொல்புரம் சர்வோதய மண்டபத்தில் சர்வதேச மகளிர் தினம் அண்மையில் நடாத்தப்பட்டபோது விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் மகளிர் அமைப்பின் மூத்த உறுப்பினர் விளக்கேற்றுவதையும் வலி. மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி.நாகரஞ்சினி ஐங்கரனுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் காணலாம். (க)

(48)

அகில இலங்கை கம்பன் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ். கம்பன் கோட்டத்தில் ...ர் ...மையில் இடம்பெ... வித்தகம் நிகழ்...ன் சிந்தனை அரங்கில் கம்பவாரிதி ஜெயராஜ் தலைமையில் சொற்போர் இடம்பெறுவதையும் இலக்கியவாதியொருவர் கௌரவிக்கப்படுவதையும் காணலாம்.

# சில்லறைப்பணத்திற்கு தட்டுப்பாடு

# பணப்பரிமாற்றத்தில் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சில்லறைப் பணத்திற்கு பெருந்தட்டுப்பாடு நிலவி வருகின்றது. யாழ். பிரதம தபாலகத்திலும் பத்து ரூபா மிகுதிப்பணத்திற்கு சில்லறை இல்லை என கூறி பத்து ரூபா முத்திரையே பெறவேண்டிய அவல நிலை யாழ். குடாநாட்டு பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் போக்கு வரத்துச் சேவையில் ஈடுபடும் பேருந்து நடத்துநர்களிடமும் பத்துரூபா உட்பட அதற்குக்குறைந்த சில்லறைப்பணம் இல்லை எனக் கூறி மீதிப்பணம் தர மறுக்கிறார்கள் அதேபோல் யாழ். குடாநாட்டு வர்த்தக நிலையங்களிலும் சில்லறை மீதிப்பணம் இல்லை என கூறப்படுகிறது. பாண்,பணிஸ் வாங்கச் செல்லும் நுகர்வோருக்கு மிகுதிப்பணத்திற்கு இனிப்பு வகை வழங்கப்படுகின்றது.

கொழும்பு, மற்றும் மேல் மாகாண மாவட்டங்களில் பேருந்து நடத்துநர்கள் கை நிறைய சில்லறை நாணயத்துடனும் சேவையில் ஈடுபடுகிறார்கள் தென்னிலங்கையில் மீதி ஒரு ரூபா கூட வழங்கப்படும் சூழலில் வட பகுதியில் குறிப்பாக யாழ். குடாநாட்டில் பேருந்து நடத்துநர்கள் மிகு திப்பணம் வழங்கப்படாமல் இருப்பது ஏன்?

இது திட்டமிடப்பட்ட ஒரு முறையா? அல்லது திட்டமிடப் படாத மக்கள் சேவையா? எனக் கேள்வி எழுப்பும் பொது மக்கள் நலனில் அக்கறை கொண்ட அதிகாரிகள் பொதுமக்கள் சேவை பெறும் இடங்களில் அவர்களுக்கு மீதிப் பணம் கிடைப்பதில் அவர்களுக்கு உரிய உரிமையில் அக்கறை செலுத்த வேண்டும். என பாதிக்கபபடும் பொது மக்கள் கோருகின்றனர். (66)

# கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் சமூகக்கற்கைகள் துறையினரால் பின்வரும் கற்கை நெறிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சமூக விஞ்ஞானத்தில் கலைமாணி (ஆங்கில மொழிமூலம்) சமூகவிஞ்ஞானத்தில் சான்றிதழ் கற்கை நெறி(தமிழ்மொழிமூலம்) இளைஞர் அபிவிருத்தியில் டிப்ளோமா( தமிழ்மொழிமூலம்), அபிவிருத்தி மற்றும் பொதுக் கொள்கையில் முதுமாணி (ஆங்கிலமொழி மூலம்) ஆகிய கற்கை நெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம் மற்றும் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் உள்ள கற்கை நிலையங்களில் தற்போது விநியோகிக்கப் படுகிறது.

மேலதிக விபரங்களுக்கு உதவிப்பணிப்பாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் யாழ்ப்பாண பிராந்திய நிலையம், பிறவுண்வீதி கொக்குவில் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ள முடியுமென பதிவாளர் தெரிவித்துள்ளார். (10)

# இலங்கை வங்கியின் புதுவருட பரிசில்கள்

இலங்கை வங்கி மன்மத புதுவருட கொடுக்கல் வாங்கல்களை எதிர்வரும் 75ஆம் திகதி காலை சுபவேளையில் ஆரம்பிக்கவுள்ளது. 57 வருடங்களாக புது வருடத்தைக் கொண்டாடி வரும் வங்கி 18 வயது வரையான பிள்ளைகளுக்கு புதுவருட பரிசுகளையும் வழங்கவுள்ளது.

7 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கு 500 ரூபா வைப்பிலிட்டால் உண்டியலும், 2500 ரூபா வைப்பிலிட்டால் நூல்களும், 5,000 ரூபா வைப்பிட்டால் கணித உபகரணப்பெட்டியும், 8-10 வயதிற்குட்பட்டவர்கள் 2500ரூபா வைப்பிலிட்டவர்களுக்கு 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் புத்தகமும், 5,000 ரூபா வைப்பிலிட்டவர்களுக்கு பற்மின்ரன், 10 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு 2500 ரூபா வைப்பிலிட்டால் அகராதிகளும்,10ஆயிரம் ரூபா வைப்பிலிட்டவர்களுக்கு பாடசாலை பைகளும் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வங்கியினால் ஆண்டு தோறும் வெளியிடப்படும் புதுவருடப்பிறப்புக் கருமங்கள் கையேடும் வெளியிடப்பட்டுள்ளன இதில் திருக்கணித முறைப்படியும் வாங்கிய பஞ்சாங்கப்படியுமான மருத்துநீர், புண்ணியகாலம், கைவிசேடம், தோஷ நட்சத்திரம் பற்றிய விளக்கங்கள் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (105)

# வீட்டுத்திட்டம் வழங்கக்கோரிக்கை

(வரணி)

வரணி வடக்கு ஜே/339 கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட பல குடும்பங்களுக்கு வன்னி இடம் பெயர் உறவுகள் மற்றும் அப் பகுதியில் வறுமைக்கோட்டிற்கு உட்பட்டவர்களுக்கு முன்பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட நிலையிலும் இன்னும் வீட்டுத்திட்டம் வழங்கப்படாததால் சிலர் ஓலைக குடிசைகளிலும் உறவினர் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் வசித்து வருகின்றனர்.

இக்குடும்பங்களுக்கு மின்னொளி கூட இல்லாத சூழலால் பாடசாலை மாணவர்கள் சில வீடுகளில் குப்பி விளக்கிலேயே இரவு நேரம் கல்வி பயில வேண்டியுள்ளது. இத்தகைய குடும்பங்கள் தாம் ஏற்கனவே பதிவுகளை மேற்கொண்டதால் தமக்கு சம்பந்தப்பட்ட வீட்டுத்திட்ட அதிகாரிகள கவனம் எடுத்து தமது குறைகளையும் நிவர்த்தி செய்வார்களா எனக் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அதேவேளை வரணி இடைக்குறிச்சி கிழக்கு, மேற்குப்பகுதி மக்களுக்குத் தற்போது வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டு துரித கதியில் வேலைகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (150)



செயற்றிறன் அரங்க இயக்கமும் யாழ்ப்பாண மாநகர சபையும் இணைந்து நடாத்திய் தனிநடிப்புப் போட்டியின் இறுதி நிகழ்வான ஓராள் அரங்கத் திருவிழா நேற்றும், நேற்று முன் தினமும் இடம் பெற்றது. இந் நிகழ்வினை வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் ஆரம்பித்து வைத்தார். (48)

# கலாசார விழா இன்று

தமிழ், சிங்கள புத்தாண்டை வரவேற்கும் முகமாக யாழ். இந்தியத்துணைத்தூதரகமும் வட மாகாண சபையின் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சும் இணைந்து நடாத்தும் கலாசார விழா இன்று திங்கட் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரி கலாசார மண்டபத்தில் நடைபெறும் என இந்தியத் துணைத்தூதரகம் அறிவித்துள்ளது.




## இலங்கை மத்திய வங்கி
## வங்கித் தொழில் உதவியாளர்கள்
## (Banking Assistants - Trainees)

இலங்கை மத்திய வங்கியானது, ஆர்வமும், குழுவாகப் பணியாற்றும் தலைமைத்துவமும், தகைமைகளும் கொண்ட இலங்கைப் பிரஜைகளிடமிருந்து வங்கித் தொழில் உதவியாளர்கள் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பதாரிகள் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் வங்கித் தொழில் சம்பந்தமான கற்கை நெறிச் சான்றிதழ்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் 30.04.2015 ஆம் திகதியன்று 23 வயதிற்கு குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர்-மனித வளத்திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை கொழும்பு-01 என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பிக்கும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் 'வங்கித் தொழில் உதவியாளர் பதவிக்கான விண்ணப்பம்' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

## இலங்கை அதிபர் சேவை 3 ஆம் வகுப்பு பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2015

கல்வியமைச்சின் கீழுள்ள இலங்கை அதிபர் சேவையின் 3 ஆம் வகுப்பின் 4 ஆயிரத்து 431 வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது தேசிய கல்வி நிறுவகத்தினால் பெற்றுக்கொண்ட கல்வி மாணிப்பட்டம்

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு பாடத்துறையிலும் பட்டம். அல்லது

பட்டப்பின் பட்ட கல்வி டிப்ளோமா. அல்லது ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் அல்லது தேசிய போதனாவியல் டிப்ளோமா

அல்லது

ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் 50 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். இவற்றுக்கான பரீட்சைக் கட்டணம் 700 ரூபா ஆகும். இதனை நாட்டிலுள்ள எந்தவொரு தபால் நிலையத்திலும் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் மே மாதம் 11 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சை ஒழுங்குபடுத்தல் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத்திணைக்களம், த.பெ.இல 1503, கொழும்பு என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் 'இலங்கை அதிபர் சேவையின் 3 ஆம் வகுப்புக்குச் சேர்த்துக் கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2015' என எழுதப்படல் வேண்டும்.

## இலங்கை பொலிஸ் திணைக்களம் பொலிஸ் கொஸ்தாபல்

இலங்கை பொலிஸ் திணைக்களத்தினால் பொலிஸ் கொஸ்தாபல் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் கணிதம், தமிழ்மொழி உட்பட இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

இரண்டு அமர்வுகளில் தோற்றிய விண்ணப்பதாரிகள் முதலாவது அமர்வில் ஒரே முறையில் ஐந்து பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் 18 வயதிற்கு குறையாமலும் 25 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் மே மாதம் 29 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும்படியாக 'பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, முதலாம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்துவ ஜயந்தி மாவத்தை, கொழும்பு - 05' என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'பொலிஸ் கொஸ்தாபல் பதவிக்கான விண்ணப்பம்' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

இப்பதவிக்கான மேலதிக தகவல்களை கடந்த வாரம் வெளியாகிய அரச வர்த்தமானிப் பத்திரிகையில் பார்வையிட முடியும்.

குறிப்பு : இதற்கு முன்னர் வெளியாகிய வர்த்தமானியில் பொலிஸ் கொஸ்தாபல், பொலிஸ் சாரதி விசேட அதிரடிப்படை பதவி வெற்றிடங்களுக்கே விண்ணப்பம் கோரப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தொகுப்பு :- சி.என்.எச். சாளிஸ்

– காணாமற்போனோர் ஆணைக்குழு –

# பரிந்துரைகள் நடைமுறை அனுமதி அளித்தார் ஜனாதிபதி

(கொழும்பு)

காணாமற் போனவர்கள் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக் குழுவினால் முன்வைக்கப்பட்ட சில பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனுமதி வழங்கியுள்ளார்.

காணாமற் போனவர்கள் தொடர்பில் விசாரணை நடாத்துவதற்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு அண்மையில் இடைக்கால அறிக்கை ஒன்றை புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் சமர்ப்பித் திருந்தது.

சில பரிந்துரைகளை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வல் பரணகம தெரிவித்துள்ளார். இதன் அடிப்படையில் சில சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடாத்த அதிகாரிகள் நியமிக்கப்பட உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, காணாமற் போனவர்கள் தொடர்பிலான விசாரணைகளுக்கு எதிராக நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் வெற்றியளிக்கவில்லை என ஆணைக்குழுவின் செயலாளர் எச்.டபிள்யூ.குணதாச தெரிவித்துள்ளார். மக்கள் சாட்சியமளிப்பதனை தடுக்கும் நோக்கில் இவ்வாறு சில தரப்பினர் மக்களை பிழையாக வழிநடாத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# கண்ணிவெடி அகற்றும் செயற்பாடு மீள்குடியேற்ற அமைச்சின் கீழ்

(கொழும்பு)



கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்களுக்கும் மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சுக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் அண்மையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கிவந்த கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்கள் தற்போது புதிய அமைச்சரவையின் விசேட தீர்மானத்திற்கு அமைவாக மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திருமதி ரஞ்சினி நடராஜபிள்ளை கலோ ரஸ்ட் தலைவர் டமியன் ஓப்ரின் மற்றும் பிரிகேடியர் ஆனந்த சந்திரசிறி ஆகியோருக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

கண்ணிவெடி அகற்றும் நிகழ்ச்சித்திட்டத்திற்குப் பொறுப்பாக அமைச்சின் மேலதிகச் செயலாளர் எம்.எம். நயீமுதின் நியமிக்கப்பட்டுள்ளார்.

விடுவிக்கப்பட்ட காணிகளிலுள்ள கண்ணிவெடிகளை விரைவாக அகற்றி மக்களை விரைந்து குடியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் அமைச்சின் செயலாளர் இதன்போது கேட்டுக்கொண்டார்.

அத்துடன் இதற்கென நிதி வழங்கும் நிறுவனங்களிடம் மிக விரைவில் பேச்சுவார்த்தை நடாத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் அமைச்சின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஐ.நா.வதிவிடப்பிரதிநிதியாக ரொஹான் பெரேரா நியமனம்

ஐக்கிய நாடுகள் அமைப்பின் வதிவிடப் பிரதிநிதியாக கலாநிதி ரொஹான் பெரேராவை நியமிக்க நாடாளுமன்றத் தெரிவுக் குழு அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி, ஐக்கிய நாடுகள் அமைப்பின் நியூயோர்க் தலைமையகத்தின் இலங்கை நிரந்தரப் பிரதிநிதியாக ரொஹான் பெரேரா நியமிக்கப்பட உள்ளார். உயர் பதவிகளுக்கு நியமனம் வழங்கும் போது, அதற்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அனுமதி அவசியமாகும்.

தெரிவுக் குழுவின் அனுமதி கிடைத்துள்ள நிலையில், ரொஹான் பெரேராவுக்கு இந்த நியமனம் விரைவில் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஜனாதிபதி சட்டத்தரணியான ரொஹான் பெரேரா, சர்வதேச சட்ட ஆணைக்குழுவின் உறுப்பினராகவும், சர்வதேச பயங்கரவாதம் குறித்த ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசேட குழுவின் தலைவராகவும், வெளிவிவகார அமைச்சின் முன்னாள் சட்ட ஆலோசகராகவும் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியப்பிரஜைகள் கைது

சுற்றுலா விசாவில் வருகை தந்து, வர்த்தகத்தில் ஈடுபட்ட இந்தியப்பிரஜைகள் மூவரை கண்டி புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர். குடிவரவு, குடியகல்வு சட்டதிட்டங்களை மீறிய குற்றச்சாட்டிலேயே இந்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கண்டி கடுகெலே பிரதேசத்தில் வைத்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்ட மூவரும் 52,38 மற்றும் 24 வயதுகளை உடையவர்கள் என்றும் அம்மூவரையும் கண்டி நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# மன்மத வருடப்பிறப்பு

## வருஷப்பிறப்புக் கருமம்

மன்மத வருஷம் சித்திரை மாதம் 1ஆம் நாள் (14.4.2015) செவ்வாய்க்கிழமை பகல் நாடி 15 விநாடி 44 மணி 12.23அபரப்பக்கத் தசமித்திதியில் அவிட்டநட்சத்திரம் 2ஆம் பாதத்தில் சுபம் நாம யோகத்தில் கடகலக்கினத்தில் தாமத குணவேளையில் நட்சத்திரபட்சியாகிய நடைத்தொழிலும் சூக்கும பட்சி நடைத் தொழிலும் செய்யுங்காலத்தில் பிறக்கின்றது.

இப்புண்ணிய காலத்தில் முற்பகல் நாடி 5 விநாடி 44 (மணி 8.23) முதல் பிற்பகல் நாடி 25 விநாடி 44 (மணி 4.23) வரை விதிப்படி சங்கற்பித்து மருத்துநீர் தேய்த்து சிரசில் விளா இலையும் காலில் கடப்பமிலையும் வைத்து ஸ்நானஞ் செய்ய வேண்டும்.

பின்பு சிவப்பு நிற பட்டாடையும் அல்லது வெண்மை நிறத்தில் சிவப்புக்கரையும் கொண்ட புதிய ஆடையணிந்து பெரியோரை வணங்கி ஆசிபெறுதல் வேண்டும். முத்து, பவளம், இழைத்த ஆபரணம் அணிந்து நறுமலர் சூடி கண்ணாடி, தீபம் முதலிய மங்கலப்பொருள்களைத் தரிசித்து மூத்தோர் ஆசி பெற வேண்டும்.

### கைவிசேடம்

**சித்திரை 2 புதன் காலை 9.57 முதல் 10.11 வரை**
**சித்திரை 2 புதன் காலை 10.23முதல் 11.58 வரை**
**சித்திரை 2 புதன் பிற்பகல் 2.10முதல் 4.06 வரை**

### திருக்கணித பஞ்சாங்கம்

வரப்போகும் மன்மதவருஷம் சித்திரை முதல்நாள் (14.4.2015) செவ்வாய்க்கிழமை பகல் உதயாதி நாழிகை 19.22 மணி பிற்பகல் 1.47 இல் பிறக்கின்றது.

நட்சத்திரம் அவிட்டம், 2ஆம் கால் திதி அபரபட்ச தசமி இது 60வருட சுற்றுவட்டத்தில் 29ஆவது வருஷம் அன்று காலை நாழிகை 9.22 (மணி காலை 9.47) முதல் நாழிகை 29.22 (மணி மாலை 5.47 வரை மேட சங்கிரமண புண்ணியகாலம் எனப்படும். வருஷம்பிறக்கும் போது உதயலக்கினம் கடகம் ஆகும்.

இப்புண்ணிய காலத்தில் சகலரும் சங்கற்ப்பூர்வமாக மருத்து நீர் தேய்த்து தலையில் கடப்பமிலையும் காலில் வேப்பமிலையும் வைத்து ஸ்நானஞ்செய்து செந்நிறப்பட்டாயினும் அல்லது சிவப்புக்கரை வைத்த வெள்ளைப் புது வஸ்திரமாயினும் தரித்து

பவளம் சேர்த்திழைக்கப் பெற்ற ஆபரணங்கள் அணிந்து கண்ணாடிதீபம், பூரணகும்பம் முதலிய மங்கலப்பொருட்களைத் தரிசித்து விநாயகரை வணங்குதல் வேண்டும்.

### கைவிசேடம்

**சித்திரை 2 புதன் காலை 7.52 முதல் 9.50 வரை**
**சித்திரை 2 புதன் முற்பகல் 10.50 முதல் 11.50 வரை**
**சித்திரை 4 வெள்ளி காலை 6.01 முதல் 6.49 வரை**

கைவிசேடம் கொடுக்கும் போது கிழக்குமுகமாக நின்று வழங்க வாங்குபவர் வடக்கு நோக்கி நின்று வாங்குதல் வேண்டும். மூத்தோரை வணங்கி ஆசி பெறல் மிக முக்கியம்

**கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்**

# எம்.பிக்களுக்கு தீர்வையற்ற வாகனம் அமைச்சரவை பத்திரம் நிராகரிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தீர்வையற்ற வாகனம் கொள்முதல் செய்யும் அனுமதிப்பத்திரத்தை வழங்க வேண்டுமென அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சரவை நிராகரித்து விட்டதாக அரச வட்டாரத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் கடந்த புதன்கிழமை அமைச்சரவைக்கூட்டம் நடைபெற்ற போது நாடாளுமன்ற விவகார அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்தன இந்தப் பத்திரத்தை சமர்ப்பித்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் தீர்வையற்ற வாகனங்களை வழங்க முடியாதெனத் தெரிவித்து அமைச்சரவை அந்த வேண்டுகோளை நிராகரித்தது.

# குடும்பஉறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிடார்

– ஜனாதிபதி தெரிவிப்பு –

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தனது குடும்ப உறுப்பினர்கள் யாரும் போட்டியிடமாட்டார்கள் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதி அளித்துள்ளார்.

பொலனறுவையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தில் இருந்து குடும்ப ஆட்சியை அப்புறப்படுத்தியுள்ளதாகவும் தனது குடும்ப உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் ஆசனத்தை எதிர்பார்க்கவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

எனது பிள்ளைகள், சகோதரர்கள் தேர்தலில் போட்டியிடமாட்டார்கள் என உறுதி செய்துள்ளதுடன், தமது குடும்பத்தினரை அரசியலில் இருந்து வெளியே வைத்து தான் உலக நாடுகளுக்கு ஒரு உதாரணமாக செயற்படவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றிக் கொண்டிருப்பதாகவும் அரசியல் திருத்தத்திற்கு அமைய ஜனாதிபதியின் அதிகாரம் குறைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ஜனாதிபதி – பிரதமர் விரைவில் சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெறவுளளது.

இந்தச் சந்திப்பு எதிர்வரும் 17ஆம் திகதி இடம்பெறும் என ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

19ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் மற்றும் தேர்தல் முறைமை மாற்றம் உள்ளிட்டவற்றை ஒரே சமயத்தில் நிறைவேற்ற வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வலியுறுத்துவதனால் தோன்றியுள்ள சிக்கல் நிலைக்கு தீர்வு காண்பது தொடர்பிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

மேலும் சுதந்திரக் கட்சியினரின் இந்த யோசனையை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி ஆர்வம் செலுத்தி வருவதினால், இது தொடர்பில் பொது உடன்பாட்டை காண்பதே இச்சந்திப்பின் முக்கிய நோக்கமாகும்.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சி அரசியலமைப்பை முதலில் சமர்ப்பித்து விட்டு பின்னர் தேர்தல் முறைமை மாற்றத்தை சமர்ப் பிப்பதற்கு ஆர்வம் காட்டி வரு கின்றமை குறிப்பிடத்தக்கது.

19ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் கொடர்பிலான விவாதம் எதிர்வரும் [illegible] திகதி இடம்பெற்ற பின் [illegible] தேர்தல் முறைமையில் மாற்றம் ஏற்படுத்துவது தொடர்பிலான விவாதம் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் இரு சீர்திருத்தங்களுக்கான வாக்கெடுப்புக்களும் ஒரே தடவையில் இடம்பெறும் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

58.தற்போது கடிதம் அனுப்புவதற்கான கட்டணம் எவ்வளவு?
(1).ருபா 5 (2).ருபா 10
(3).ருபா 15 (4).மேற்கூறப்பட்ட மூன்றும் பிழை

59.தந்தி அடிப்பதானால் எங்கே செல்லல் வேண்டும்?
(1).தபாற்கந்தோர் (2).வங்கி (3).வைத்தியசாலை (4).பாடசாலை

60.மிகக்குறுகிய நேர இடைவெளியில் தகவல்களைப் பெறக்கூடிய சாதனம் எது?
(1).கையடக்கத்தொலைபேசி (2).கடிதம்
(3).வாழ்த்துமடல் (4).தபால்அட்டை


61.முற்காலத்தில் செய்தியைப் பரிமாறுவதற்குப் பயன்படுத்தப்பட்ட பறவை எது?
(1).புறா (2).கிளி (3).காகம் (4).மைனா


62.கைகளில் எடுத்துச் செல்லக்கூடிய தகவல்த்தொடர்பு சாதனம் எது?
(1).கணனி (2).மின்னஞ்சல் (3).கையடக்கத்தொலைபேசி (4).தொலைபேசி

63.தபாற்கந்தோரில் வைக்கப்பட்டுள்ள நிலநிற தபாலப் பெட்டியில் எவ்வாறான கடிதங்கள் இடப்படல் வேண்டும்?
(1).வெளிநாட்டுக் கடிதங்கள் (2).உள்ளூர்க் கடிதங்கள்
(3).வெளிமாவட்டக் கடிதங்கள் (4).எல்லாக்கடிதங்களும் போடலாம்


64.இலங்கையில் உள்ள தொலைத்தொடர்பு நிறுவனங்களில் ஒன்று அல்லாதது எது?
(1).ரெலிகொம் (2).லங்காபெல் (3).சன்டெல் (4).அன்டன்


(12).பின்வரும் படங்களுக்குப் பொருத்தமான பெயர்களை எழுதுக


65. 
..................


66. 
..................

67. 
..................

68. 
..................

69. 
..................

70. 
..................

71. 
..................

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01).01.1.விலங்கு 2.தாவரம் 02.உணவு 03.பசு 04.இலவம் 05.வாற்பேய்
06.நிலம் 07.சிங்கராஜக்காடு 08.யாழ்ப்பாணம் 09.பொருத்தமான காலநிலை
10.சிட்டுக்குருவி 11.செயற்கை (02).12 - 14 வரை சிங்களத்தில் எழுதவும்
(03).15.மின்குமிழ், செப்புக்கம்பி, மின்கலம் 16.1 17.கட்டப்படுகிறது 18.1.பொலித்தீன்
2.ரெஜிபோம் 19.பென்சில் (04).20.8 21.4 22.8,4 23.1 24.8 25.9
(05).26.12 27.40 28.25kg 29.1/2 30.செங்கோணம் 31.40909
(06).32.நீர்ப்பூவின் உயரம் குறைதல் 33.உயரத்தைக் கூட்ட வேண்டும் 34.எதிர்ப்பக்கத்தில் 35.எதிர்ப்பக்கத்தில்
(07).36.விலங்கு 37.பூ 38.பைத்தியன் (08).39.Roof 40.sunlight
41.mist (09).42.கோபுரம் 43.மின்சாரம் (10).44.பிழை 45.சரி
46.பிழை 47.சரி 48.சரி 49.பிழை (11).50.3 51.2 52.1 53.1 54.3 55.2 56.2
57.1 58.1 60.3 61.2 62.3 63.1 64.3 65.3 66.1
(12).67 - 70 வரை விரும்பிய வசனம்

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 3 பரீட்சை முன்னோடி - 2015 (சுற்றாடல்)

பகுதி - I
1 மணி 30 நிமிடம்



# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.

| மணல் | பள்ளமான | கடினமாக | குளிர்ச்சியான | களி |
|---|---|---|---|---|

(01).பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக
01.மணல்மண்ணில் 80 சதவீதம் ........................ மண் காணப்படும்
02.மேட்டு நிலத்தில் ஓடுவது ........................ இருக்கும்
03.மழை பெய்யும் போது மழை நீர் ........................ இடங்களை நோக்கி ஓடும்
04.அதிகளவு நீரை மண்ணில் தேக்கி வைக்கும் மண் ........................ மண் ஆகும்
05.மழை பெய்யும் போது ........................ சூழல் ஏற்படும்

(02).தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் கூட்டினுள் எழுதுக
06.மிக வேகமான காற்று பொருட்சேதங்களையும் உயிர்ச்சேதங்களையும் ஏற்படுத்தலாம் ☐
07.காற்றின் வேகம் மிகக்குறைந்தால் மரங்கள் அசையாது நிற்கும் ☐
08.காகிதக் கப்பல்களைக் காற்றில் பறக்க விடலாம் ☐
09.காற்று வீசும் போது மரம், செடி, கொடிகள் அசைவின்றி இருக்கும் ☐
10.நீரில் நீந்தப் பழகுவதற்கு காற்று நிரப்பப்பட்ட டியூப்களைப் பயன்படுத்தலாம் ☐

(03).பொருத்தமான சொற்களை இணைக்குக

| | | |
|---|---|---|
| 11. | கம்மாலைப் பட்டறை | ஊதி செய்தல் |
| 12. | வியர்வை | காற்று |
| 13. | பாய்க்கப்பல் | துருத்தி |
| 14. | புயல்க்காற்று | மின்விசிறி |
| 15. | பூவரசஇலை | மரங்கள் உடைதல் |

(04).வினாக்களுக்கு விடை தருக
16.காற்றினால் கிடைக்கும் நன்மைகள் மூன்று தருக
..................................................

17.காற்றினால் கிடைக்கும் பாதிப்புக்கள் மூன்று தருக
..................................................

18.வர்த்தக ரீதியில் காற்றைப் பயன்படுத்தும் இரு சந்தர்ப்பங்கள் தருக
..................................................

19.காற்றைப் பெறுவதற்குப் பயன்படுத்தும் கருவிகள் இரண்டு தருக
..................................................

20. வளியை நிரப்பக்கூடிய பொருட்கள் மூன்று தருக

.................................................................................................

**(05). பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.**

| | | | | |
|---|---|---|---|---|
| காற்று | ஒட்சிசனைப் | அசையும் | பறக்கும் | வளி |

21. காற்று வேகமாக வீசும் போது மேகங்களும் வேகமாக ..........................

22. ஈரமான துணிகளை உலர்த்துவதற்கு .......................... உதவுகின்றது

23. மனிதன் சுவாசிப்பதற்கு வளியிலுள்ள .......................... பயன்படுத்துகின்றான்

24. உயிரினங்கள் உயிர் வாழ்வதற்கு .......................... அவசியமாகும்

25. காகித விமானம் காற்றில் ..........................

**(06). சரியான விடையின் கீழ் கோடிடுக**

26. வகுப்பறையில் தினமும் செய்யக்கூடியவைகளில் ஒன்றாகக் கருத முடியாதது எது?
(1). தூசு தட்டிக் கூட்டுதல் (2). தினமும் நிலத்தைக் கழுவுதல்
(3). வெண்கட்டியைக் கொண்டு வருதல் (4). தளபாடங்களை ஒழுங்காக அடுக்குதல்

27. வகுப்பறையை மாசுபடுத்தும் ஒரு பிராணியாகக் கருத முடியாதது எது?
(1). காகம் (2). புறா (3). சிலந்தி (4). குயில்

28. உமது வகுப்பறையினுள் காணப்படுபவையாக இருப்பது எது?
(1). ஆய்வுகூடம் (2). விளையாட்டு மைதானம்
(3). கரும்பலகை (4). அதிபர் அலுவலகம்

29. ஒரு மாணவர் குழுவால் பின்வருவனவற்றுள் எதில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது?
(1). மின்மோட்டர் (2). விளையாட்டு மைதானம்
(3). பாடசாலைத்தோட்டம் (4). வகுப்பறை

30. ஒரு மைதானத்தைச் சுத்தம் செய்யப் பயன்படுத்தும் ஒரு பொருளாகக் கருத முடியாதது எது?
(1). மண்வெட்டி (2). கத்தி
(3). குப்பை வாளி (4). உழவுஇயந்திரம்

31. கற்களை சிறு துண்டுகளாக உடைக்கப் பயன்படும் கருவிகளில் ஒன்று எது?
(1). சுத்தியல் (2). மண்வெட்டி (3). கோடரி (4). உளி

32. வகுப்பறையில் செய்யக்கூடியவைகளில் ஒன்று எது?
(1). ஓடுதல் (2). பாய்தல்
(3). படித்தல் (4). பட்டம் விடுதல்

33. மண்ணரிப்பு ஏற்படாது இருக்க செய்ய வேண்டியவைகளில் ஒன்று எது?
(1). முடுப்பயிர் வளர்த்தல் (2). மரங்களை வெட்டுதல்
(3). நிலத்தை அதிகம் பண்படுத்துதல் (4). காட்டுக்குத் தீ மூட்டுதல்

34. பாடசாலையில் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய இரசாயனப் பதார்த்தங்கள் காணப்படுவது எங்கே?
(1). வகுப்பறையில் (2). விஞ்ஞான ஆய்வு கூடத்தில்
(3). அதிபர் அலுவலகத்தில் (4). விளையாட்டு மைதானத்தில்

35. ஒரு பாடசாலையின் முன்னேற்றத்திற்கு உதவுவோர் யார்?
(1). பெற்றோர் (2). ஆசிரியர், அதிபர்
(3). மாணவர்கள் (4). மேற்கூறிய எல்லோரும்

**(07). தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் கூட்டினுள் இடுக**

36. தாவரங்களை அழிப்பதனால் மண்ணரிப்பைத் தடுக்க முடியும் ☐

37. மாற்றங்களை ஏற்படுத்தும் போது அவை நன்மை தரக்கூடியவையாக இருத்தல் வேண்டும் ☐



38. பாடசாலைச் சூழலிலும் வீட்டுச்சூழலிலும் எமது தேவைக்கு ஏற்ப மாற்றங்களை ஏற்படுத்துவது சிறந்ததாகும் ☐

39. குழு வேலையை ஆரம்பிக்க முன்னர் தமது குழுக்களுக்குரிய வேலைகளை ஒப்படைத்தல் வேண்டும் ☐

40. விளையாட்டுக்களில் ஈடுபடும் போது விபத்துக்கள் ஏற்படமாட்டாது ☐

**(08). பொருத்தமான சொற்களை இணைக்குக**

| | | |
|---|---|---|
| 41. | மண்வெட்டி | இறப்பர் |
| 42. | கதிரை | மரம் |
| 43. | பந்து | களிமண் |
| 44. | கயிறு | இரும்பு |
| 45. | ஓடு | தும்பு |

**(09). பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக**

| | | | | |
|---|---|---|---|---|
| செயற்பாட்டில் | மண்ணரிப்பு | தொற்றுநோய் | ஆசிரியர் | மண்வெட்டி |

46. மலசலகூடம் சுத்தமாக இருந்தால் .......................... பரவாது

47. ஆசிரியரின் தலையீட்டுடன் ஒவ்வொரு குழுவும் .......................... ஈடுபடல் வேண்டும்

48. குழுத்தலைவர்களின் பங்களிப்பை .......................... மதிப்பீடு செய்தல் வேண்டும்

49. காடுகள் அழிக்கப்படுவதனால் .......................... ஏற்படுகின்றது

50. தோட்ட வேலைகளில் ஈடுபடும் போது பயன்படுத்தும் கருவிகளில் ஒன்று .......................... ஆகும்

**(10). பின்வரும் வினாக்களுக்கு விடை தருக**

51. உமது பாடசாலை மைதானத்தைத் துப்புரவு செய்வதற்கு எவ்வாறான கருவிகளைப் பயன்படுத்துவீர்?

.................................................................................................

52. குழுக்களாகச் செயற்பாட்டில் ஈடுபடும் போது கிடைக்கும் நன்மைகள் எவை?

.................................................................................................

53. உமது பாடசாலையில் எவ்வாறான பயனுள்ள மாற்றங்களை ஏற்படுத்தலாம் என விபரிக்குக

.................................................................................................

54. உமது சுற்றாடலில் எவ்வாறான பயனுள்ள மாற்றங்களை ஏற்படுத்தலாம்?

.................................................................................................

55. நீர் அவதானித்த தொழிற்சாலை ஒன்றில் நடைபெறும் செயற்பாடுகளை விபரிக்குக

.................................................................................................

**(11). சரியான விடையின் கீழ் கோடிடுக**

56. பின்வரும் எச்சந்தர்ப்பத்தில் வாழ்த்து மடல் அனுப்பப்படுவதில்லை?
(1). வெசாக்தினம் (2). தைப்பொங்கல் தினம்
(3). கிறிஸ்மஸ் தினம் (4). வீடு குடிபுகும் தினம்

57. தற்போது தபால் அட்டை அனுப்புவதற்கான கட்டணம் எவ்வளவு?
(1). ரூபா 5 (2). ரூபா 7
(3). ரூபா 10 (4). மேற்கூறப்பட்ட மூன்றும் பிழை

# தேசிய அரசாங்கத்தில் பங்கேற்கமாட்டோம்

## ஜே.வி.பி. அறிவிப்பு

(கொழும்பு)

தேசிய அரசாங்கமொன்றில் அங்கம் வகிக்கும் சாத்தியங்கள் எதுவும் கிடையாது என ஜே.வி.பி கூறியுள்ளது.

தேசிய அரசாங்கத்தில், நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் அனைத்துக்கட்சிகளும் இணைந்து கொண்டு செயற்பட்டால், எதிர்க்கட்சி என்ற ஒன்று இல்லாமல் போய்விடும் என ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மே மாதம் முதல் வாரம் வரையில் நாடாளுமன்ற அமர்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே ஜே.வி.பி.யின் நிலைப்பாடாகும்.

19ஆவது திருத்தச் சட்டம் போன்ற முற்போக்கான ஓர் சட்டமொன்றைக் கூட நிறைவேற்றிக்கொள்ள முடியாவிட்டால், தற்போதைய நாடாளுமன்றின் ஊடாக வேறு ஆக்கபூர்வமான யோசனைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாது.



நாட்டுக்குத் தேவையான அரசியல் அமைப்பை புதிய நாடாளுமன்றமேனும் கொண்டு வர வேண்டும்.

எதிர்வரும் 23ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படாவிட்டால் எப்போது நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்பதனை ஜனாதிபதி முன்கூட்டியே அறிவிக்க வேண்டுமென அனுரகுமார திஸாநாயக்க சிங்கள ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

# ஐ.தே.க.வில் திஸ்ஸ மீளவும் இணைய முயற்சி

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மீண்டும் அந்தக் கட்சியில் இணைந்து கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியில் மீண்டும் இணைந்து கொள்வது தொடர்பில் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டுள்ள போதிலும், கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க இறுதி தீர்மானத்தை அறிவிக்காததால், அத்தநாயக்க கட்சியில் இணைவது தாமதமாகி வருவதாக கூறப்படுகிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கியதாக திஸ்ஸ அத்தநாயக்க கூறியுள்ளார்.

எனினும் தான் எடுத்த அந்த முடிவு குறித்து அவர் பல சந்தர்ப்பங்களில் கவலையை வெளியிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

எவ்வாறாயினும், ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னணித் தலைவர்கள் சிலர் அத்தநாயக்கவுடன் நெருக்கமான தொடர்புகளை கொண்டிருப்பதுடன் அவர்களே அவரை மீண்டும் கட்சியில் இணைக்கும் பேச்சுவார்த்தைகளை ஒழுங்கு செய்ததாகக் கூறப்படுகிறது.

# முன்கூட்டிய ஜனாதிபதித் தேர்தல் ஜெனீவா நெருக்கடியே காரணம்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

கடந்த ஜனாதிபதித் தேர்தலை இரண்டு வருடங்களுக்கு முன் நடாத்துவதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த எடுத்த தீர்மானத்துக்கு சோதிடர்கள் காரணமல்ல. ஜெனீவா நெருக்கடியே உண்மையான காரணம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கட்சி உறுப்பினர்களிடம் தெரிவிததுள்ளார்.

குறித்த தினத்துக்கு இரு வருடங்கள் முன்பே ஜனாதிபதித் தேர்தலுக்கு சென்றதை சிலர் சோதிடர்களை காரணம் காட்டி சாக்குப் போக்கு கூறுகின்றனர். உண்மை அவ்வாறல்ல. மகிந்த ராஜபக்ஷவுக்கு ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக்குழுவிலிருந்து பாரிய அச்சுறுத்தல் காணப்பட்டது.

இதிலிருந்து தப்புவதற்காக தேர்தல் ஒன்றை நடாத்தி தனக்கு நாட்டில் மக்களின் ஆதரவு இருக்கின்றது என உலகிற்கு காட்ட முற்பட்டார். இதற்காகவே, தேரதலை முற்படுத்தினார் என பொலனறுவை பிரதேச சபை உறுப்பினர்களுடன் மேற் கொண்ட விசேட கலந்துரையாடலின்போது ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

# சிகரெட் பைக்கற்றுக்களில் 80வீத எச்சரிக்கைப் படங்கள்




எதிர்வரும் ஜூன் மாதம் தொடக்கம் சிகரெட் பைக்கற்றுகளில் 80 வீதமான எச்சரிக்கைப் படங்கள் பிரசுரிக்கப்படவுள்ளதாக அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

ஊடக அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு கருத்துத் தெரிவித்த அவர்,

புகைத்தலை குறைக்கும் நோக்கில் 60 வீத எச்சரிக்கைப் படங்கள் தற்போது பிரசுரிக்கப்படுகின்றன. எதிர்வரும் ஜூன் முதல் 80 வீதம் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது தவிர கடைகளில் எச்சரிக்கைப் பதாகைகள் வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

# பௌத்தமத கோட்பாடுகளை பின்பற்றவேண்டும் ஞானசாரதேரர்

## பீல்ட்மார்ஷல் பொன்சேகா கோரிக்கை

பொதுபலசேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் பௌத்த மதக் கோட்பாடுகளைப்பின்பற்ற வேண்டுமென ஜனநாயக கட்சித் தலைவர் பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா தெரிவிதுள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஞானசார தேரருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பதவி விலகுமாறு கோரும் அதிகாரம் கிடையாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை ஊடகத்திடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முதுகெலும்பற்ற தலைவர் எனவும் அவர் இராஜினாமா செய்ய வேண்டும் எனவும் ஞானசார தேரர் குறிப்பிட்டிருந்தார்.

ராஜபக்ஷ அரசாங்கம் போன்று நல்லாட்சி அரசாங்கம் எவரையும் பழிவாங்காத காரணத்தினாலேயே ஜனாதிபதியை, ஞானசார தேரர் இவ்வாறு விமர்சனம் செய்ய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என அவர் தெரிவித்தார்.

கடந்த சில ஆண்டுகளாக ஞானசார தேரரும், அவரது அமைப்பினரும் எவ்வாறான நிலைப்பாட்டைப்பின்பற்றி வருகின்றனர் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமே என அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் குறித்து ஞான சார தேரர் எதுவும் குறிப்பிடவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஜனாதிபதி ஆணைக்குழுவிலிருந்து தனிப்பட்ட காரணமாக மூவர் விலகினர்

கடந்த ஐந்து வருடங்களில் இடம்பெற்ற ஊழல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் விசாரணை செய்ய அமைக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவில் இருந்து மூன்று பேர் விலகியுள்ளனர்.

ஏற்கனவே இந்தக் குழுவில் உயர்நீதிமன்ற நீதியரசர்களான பிரியாசத் மற்றும் அனில் குணரட்ன ஆகியோர் அங்கம் வகித்தனர். மூன்றாவதாக இளைப்பாறிய கணக்காய்வாளர் நாயகம் ஏ சி மாயாதுன்ன நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்தநிலையில் இவர்கள் மூவரும் குழுவில் இருந்து விலகியுள்ளனர். தனிப்பட்ட காரணங்களே இதற்காகக் கூறப்பட்டுள்ளன.

விலகியுள்ள நீதியரசர்களுக்குப் பதிலாக மேல்நீதிமன்ற நீதிபதிகளான பீரிதி பத்மன் சூரசேன, டி ஏ மெண்டிஸ் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இளைப்பாறிய கணக்காய்வாளர் நாயகத்துக்குப் பதிலாக இளைப்பாறிய மற்றும் ஒரு கணக்காய்வாளர் நாயகம் பி.ஏ பிரேமதிலக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏனைய இரண்டு உறுப்பினர்களான மேல்நீதிமன்ற நீதிபதி கிஹான குலதுங்க, இளைப்பாறிய மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் ஜயாத்துரை ஞானதாசன் ஆகியோர் தொடர்ந்தும் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். இந்தக் குழுவுக்கு தற்போது வரை 400 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெங்காய விலையில் வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்குடா நாட்டில் சின்ன வெங்காயத்தின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. சின்னவெங்காயத்தின் அறுவடைக் காலம் ஆரம்பிக்கப்பட்டு சந்தைகளில் வெங்காயத்தின் நிரம்பல் அதிகளவில் காணப்படுவதால் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. வெங்காயத்தின் விலை 40 ரூபா தொடக்கம் 80 ரூபா வரை விற்பனையாகிறது.

வெங்காய விலையில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ள அதேவேளை நுகர்வோர் மலிவு விலையில் வெங்காயத்தினைக் கொள்வனவு செய்து வருகின்றனர்.

யாழ்.குடாநாட்டில் ஏனைய மரக்கறிகளின் விலையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




யாழ்.பண்ணைப்பாலத்திற்கும் மண்டைதீவுச்சந்திக்கும் இடையில் புதிதாக அமைக்கப்பட்ட பாலம் கடந்த செவ்வாய்க்கிழமை மக்கள் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டுள்ளது. இது பண்ணைப்பாலத்துக்கு நிகரான பாலமாகக் காணப்படுகிறது.

# யேமனில் சவுதி குண்டுமழை

# 500 கிளர்ச்சியாளர்கள் பலி




யேமனின் எல்லைப் பகுதிகளில் ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் மீது நடாத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் 500 கிளர்ச்சியாளர்கள் உயிரிழந்துள்ளதாக சவுதி அரசு அறிவித்துள்ளது. யேமனில் இடம்பெற்றுவரும் உள்நாட்டு போர் கடந்த மார்ச் மாதம் முதல் தீவிரம் அடைந்துள்ளது.

அரசிற்கு எதிராக போராடிவரும் ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் மீது சவுதி அரேபியாவும் அதன் நட்பு நாடுகளும் விமானங்கள் மூலம் குண்டு வீச்சு தாக்குதல் நடாத்தி வருகின்றன. இந்த நிலையில் இரு நாடுகளுக்கும் இடையே உள்ள பகுதிகளிலும் சவுதி கூட்டுப்படைகள் தாக்குதல் நடாத்தி வருகின்றன. மார்ச் மாதம் 26 ஆம் திகதியிலிருந்து இதுவரையிலும் சவுதிக்கும் ஏமனுக்கும் இடைப்பட்ட எல்லைப் பகுதிகளில் ஆயிரத்து 200 முறை தாக்குதல் நடந்துள்ளன.

வான்வழி தாக்குதல் மாத்திரமன்றி சரியான நேரத்தில் தரைவழித் தாக்குதலையும் மேற்கொள்ளவுள்ளதாக சவுதி அரேபியா அறிவித்துள்ளது.

# இளைஞர்களின் விருப்பத்தை நிறைவேற்றிய மோடி




பிரான்ஸிக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மோடி, அங்குள்ள இந்தியர்களுடன் சேர்ந்து செல்பி எடுத்துக் கொண்டுள்ளார்.

பிரான்ஸில் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் நரேந்திர மோடி அங்கு பிரெஞ்ச் விண்வெளி மையத்தை பார்வையிடச் சென்றார். அப்போது அங்கிருந்த இந்தியர்களுடன் செல்பி எடுத்துக் கொண்டார், மேலும் டூலவ்சில் இந்திய ஊழியர்கள் சிலருடனும் செல்பி எடுத்துக் கொண்டார்.

இதுகுறித்து டுவிட்டரில், இளம் நண்பர்களுடன் சேர்ந்து செல்பி எடுத்துக் கொண்டதாக தெரிவித்துள்ளார். இந்நிலையில் இளைஞர்கள் செல்பியை விரும்புகின்றனர், எனவே பிரதமர் மோடி அவர்களின் ஆசையை நிறைவேற்றியுள்ளார் என்று வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர் சையது அக்பருதீன் ட்வீட் செய்துள்ளார்.

# விண்வெளி எரி கல்லுக்கு மலாலாவின் பெயர்



விண்வெளியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய எரிகல்லுக்கு மலாலாவின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. அமெரிக்க விண்வெளி ஆய்வு நிலையமான நாசாவின் ஜெட் உந்துவிசை ஆய்வுக்கூட வானியல் ஆராய்ச்சி விஞ்ஞானி எமி மைன்ஸர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

எரிகல்லுக்கு மலாலாவின் பெயரைச்சூட்டி இருப்பது மிகுந்த மரியாதைக்குரியது என அவர் தெரிவித்துள்ளார். ஏற்கனவே பல எரிகற்களுக்கு பெயர் சூட்டி இருந்தாலும், பெண்களின் பெயர்களை சூட்டியதில்லை என்ற விடயத்தை சக விஞ்ஞானி டொக்டர் கேரி நியூஜென்ட் நினைவுபடுத்தியுள்ளார். இந்நிலையிலேயே செவ்வாய், வியாழன் கிரகங்களுக்கு இடையே தான் கண்டுபிடித்த எரிகல்லுக்கு மலாலாவின் பெயரை சூட்டியதாக எமி மைன்ஸர் குறிப்பிட்டுள்ளார் இந்த எரிகல், ஐந்தரை வருடங்களுக்கு ஒரு முறை சூரியனை சுற்றி வரும் எனவும் எமி மைன்ஸர் தெரிவித்துள்ளார்.

# போர்க் குற்றத்தில் ஈடுபட்டவருக்கு மரண தண்டனை நிறைவேற்றம்



பங்களாதேஷ் விடுதலையின்போது போர் குற்றங்களில் ஈடுபட்டதற்காக ஜமாத்-இ-இஸ்லாமி தலைவரான முகமது கமாருஸமனுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. நேற்றுமுன் தினம் இரவு முகமது கமாருஸமான் தூக்கிலிடப்பட்டதாக அந்த நாட்டு செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. பங்களா தேஷில் போர்க்குற்றத்திற்காக மரண தண்டனை பெற்றுள்ள இரண்டாவது நபர் முகமது கமாரு ஸமான் என்பது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானிலிருந்து பிரிந்து பங்களாதேஷ் என்ற தனிநாடு உதயமாவதற்காக 1971ஆம் ஆண்டு பங்களாதேஷில் உள்நாட்டுப் போர் நடைபெற்றது.

இந்தப் போரின்போது பலர் துன்புறுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டதாக தெரிவித்து, படுகொலைகளுக்கு காரணமானவர்கள் மீது டாக்காவின் போர்க்குற்ற நீதிமன்றத்தில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் பங்களாதேஷின் முக்கிய எதிர்க்கட்சியான ஜமாத்-இ இஸ்லாமி கட்சியின் தலைவர் முகமது கமாருஸமான் மீதும் போர்க்குற்ற வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

பங்களாதேஷ் வடக்கு ஷெர்பூர் பகுதியில் உள்ள சோஹாபூர் கிராமத்தில் பாகிஸ்தான் இராணுவ உதவியுடன் 164 விவசாயிகளை சுட்டுக் கொன்றதாக முகமது கமாருஸமான் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

போர்க்குற்ற விசாரணையின் போது விதவைப் பெண்கள் நேரடியாக நீதிமன்றில் ஆஜராகி சாட்சியம் அளித்த அதேவேளை குறித்த குற்றங்களை முகமது கமாருஸமான் ஒப்புக் கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# ஐ.நாவில் நிரந்தர உறுப்புரிமை இந்தியாவிற்கு உரிமை உண்டு



ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில நிரந்தர உறுப்பு நாடாவதற்கு இடம் கோர இந்தியாவிற்கு உரிமை உண்டு என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். பிரான்ஸிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் இந்திய வம்சாளியினரிடையே உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கையேந்தும் நிலையில் இந்தியா இல்லை எனவும் மேலும் தெரிவித்துள்ளார். இந்தியாவை முன்னெடுத்துச் செல்லவே பிரான்ஸ் வந்துள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டார். வளர்ச்சிப் பாதையில் பிரான்ஸ் நாட்டை இந்தியா பின் தள்ளும் என்ற நம்பிக்கை உள்ளதாகத் தெரிவித்த அதேவேளை இந்தியா அமைதியை விரும்பும் நாடு எனவும் இந்தியாவில் விரைவில் வறுமை ஒழிக்கப்படும் எனவும் பிரதமர் மோடி நம்பிக்கை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இறந்து கரை ஒதுங்கிய திமிங்கிலங்கள் ஜப்பானில் சுனாமிக்கு அறிகுறியா?



ஜப்பானிய கடற்கரையில 156 திமிங்கலங்கள் இறந்து கரை ஒதுங்கியதால், சுனாமி ஏற் படக்கூடிய அறிகுறியென அநநாட்டு மக்கள் அச்சமடைநதுள்ளனர். அந்நாட்டில் கடந்த 2011 ஆம் ஆண்டு, கடலுக்குள் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் சுனாமி பேரலை எழுந்தது. இந்த அனர்த்தத்தில் 19 ஆயிரம் பேர் உயிரிழந்த நிலையில், இவ்வாறு பூகம்பம் மற்றும் சுனாமி ஏற்படுவதற்கு 6 நாட்களுக்கு முன்னர், 50 திமிங்கிலங்கள் கரை ஒதுங்கியுள்ளன. அதேபோன்று தற்போதும் 150 இற்கும் மேற்பட்ட திமிங்கிலங்கள் கரை ஒதுங்கியுள்ளதால் 2011 இல் ஏற்பட்ட ஆபத்து தங்களை சூழ்ந்துவிடுமோ? என மக்கள் அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளனர்.

2011 இல் நிகழ்ந்த நிலநடுக்கம் மற்றும் சுனாமி தாக்கத்தால் புகுஷிமா அணு உலையில் கதிர்வீச்சு ஆபத்தும் ஏற்பட்டது. கரை ஒதுங்கிய திமிங்கிலங்கள் அனைத்தும் புற்றுநோய் உள்ளிட்ட எவ்வித நோயாலும் பாதிக்கப்படவில்லை. எனவே திமிங்கிலங்கள் உயிரிழக்க காரணம் என்ன என்பதை பற்றி ஆராய்ந்து வருகிறோம் என கரையொதுங்கிய திமிங்கிலங்களை பார்வையிட்ட விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். எனினும் திமிங்கிலம் கரை ஒதுங்கியதால் சுனாமி ஏற்படும் என யாரும் அச்சப்படத் தேவையில்லை என உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த அளவு விளம்பரத்திற்கு

1000/= ரூபா மட்டுமே

# அமெரிக்காவில் இந்து திருமணம்



அமெரிக்க நாடாளுமன்ற பெண் உறுப்பினர் ஒருவர் இந்து முறைப்படி திருமணம் செய்து கொண்டார். அவருக்கு பிரதமர் மோடி சார்பில் வாழ்த்துத் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்காவின் 50 ஆவது மாகாணம் ஹவாய் தீவுகள். இந்த மாகாணத்துக்கான அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளவர் 33 வயதாகும் துளசி கப்பார்ட். இவருக்கும் அவருடைய காதலரான 26 வயதாகும் ஆப்ரகாம் வில்லியம்ஸுக்கும் ஹவாய் தீவில் மிகவும் எளிமையான முறையில் இந்து முறைப்படி திருமணம் நடந்தது. வேதங்கள் முழங்க இவர்களுடைய திருமணத்தில் அனைவருக்கும் சைவ உணவே பரிமாறப்பட்டது.

# 19 ஐ எதிர்ப்பவர்களுக்கு பொதுத் தேர்தலில் வாய்ப்பு இல்லை

## கடும் தொனியில் மைத்திரி எச்சரிக்கை

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 19 ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக வாக்களிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் வாய்ப்பு வழங்குவதில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எச்சரித்துள்ளார்.

19 ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றுவதில், ஜனாதிபதியும், பிரதமரும் தீவிர அக்கறை காண்பித்து வருகின்றனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவராக இருந்தாலும், அவரது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர், 19 ஆவது திருத்தச்சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருவதுடன் அதனைத் தோற்கடிக்கவும் கங்கணம் கட்டியுள்ளனர்.

இந்தநிலையில், தனது கட்சிக்குள் எழுந்துள்ள எதிர்ப்புகளைச் சமாளிக்கவும், 19 ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றுவதற்கும் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள மைத்திரிபால சிறிசேன முடிவெடுத்துள்ளார்.

இதன்படி, 19ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக வாக்களிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, விரைவில் நடக்கவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிட வாய்ப்பு வழங்குவதில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதனால், 19ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிரானவர்கள் அடங்கிப் போகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



19ஆவது திருத்தச்சட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

### தேர்தல்...

வலயங்களைத் துரிதமாக விடுவிக்க வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

### சுகாதார...

ரையாடல் ஒன்று இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டுள்ள அதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் சுகாதாரத் தொண்டர்கள் சிலர் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். (25)

## கல்லுண்டாய் வெளியில் மீண்டும் மலக்கழிவு

(நவாலி)

மீண்டும் நவாலி; ஆனைக்கோட்டை, காக்கைதீவு மக்கள் ஆபத்தினை எதிர்நோக்கக் கூடிய அளவிற்கு மலக்கழிவு, ஆஸ்பத்திரி கழிவுகள் கல்லுண்டாய் வெளியில் வந்து குவிகின்றன.

இதனால் மேற்படி பகுதிகளில் மனிதர்கள் வாழமுடியாத அவல நிலை மீண்டும் தோற்றம் பெறுகின்றது.

எனவே வடக்கு மாகாண முதல்வர் உடன் தலையிட்டு மாநகரகழிவுகளை கொட்டுவதை உடன் நிறுத்த வேண்டும் என நவாலி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் பொ. ஆனந்தநடராசா கேட்டுள்ளார்.

கல்லுண்டாய் திண்மக் கழிவுகளால் வலி.தென்மேற்கு மக்களுக்கு "பேராபத்தும், பேரிடரும்" என்னும் தலைப்பில் நேற்று நவாலி, ஆனைக்கோட்டை மக்களுக்கு விளக்கமளிக்கும்போது இவ்வாறு தலைவர் பொ.ஆனந்தராசா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், திண்மக்கழிவு மலக்கழிவு என்பன கல்லுண்டாய் வெளியில் கொட்டாதீர்கள் என மக்கள் சக்தி போராட்டம் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து இரு வாரங்கள் கழிவுகள் கொட்டப்படாமல் எமது மக்கள் ஆபத்தில் இருந்து காக்கப்பட்டனர்.

எமது நிர்வாக எல்லையை பயன்படுத்தி யாழ்.மாநகர சபை பல மில்லியன் ரூபா மாதாந்தம் வருமானம் ஈட்டுகின்றது.

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு ஒரு சல்லி நிதி கூட வருமானம் கிடைப்பதில்லை. யாழ்.மாநகர சபைக்கு திண்மக் கழிவு பொறிமுறைக்கு அரியாலை, பொம்மை வெளியில் காணிகள் உண்டு.

பொறிமுறை அற்ற விதத்தில் கொட்டப்படும் கழிவுகளால் இன்னும் 5 ஆண்டுகளில் நவாலி, ஆனைக்கோட்டை பகுதி மக்கள் இடம்பெயரவேண்டிய நிலை ஏற்படும்.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி, மானிப்பாய் பிரதேச சபை தவிசாளர் ஆகியோர் இனிமேலும் மௌனிகளாக இருக்க முடியாது. உடன் தலையிட்டு மக்களைக் காப்பாற்ற முன்வாருங்கள்.

இதற்கு மேலாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையில் உடன் தலையிட்டு யாழ்.மாநகர கழிவுகளை கல்லுண்டாயில் கொட்டுவதை தடைசெய்து இதற்கான திட்டமிடல் முழுவதையும் வலி.தென்மேற்கு பிரதேச சபை தவிசாளரிடம் ஒப்படையுங்கள் என்றார். (92)

## பரபரப்பான ஆட்டத்தில் டில்லியை வீழ்த்தியது ராஜஸ்தான்

டில்லி அணிக்கு எதிரான ஐ.பி.எல். லீக் ஆட்டத்தில் ராஜஸ்தான் அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது.

ஐ.பி.எல். 8 ஆவது தொடரில் நேற்று நடந்த 6 ஆவது லீக் ஆட்டத்தில் டில்லி, ராஜஸ்தான் அணிகள் மோதின. இதில் நாணய சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணித்தலைவர் ஸ்டீவ் ஸ்மித் களத்தடுப்பை 'தெரிவு' செய்தார்.

இதைத் தொடர்ந்து களமிறங்கிய டில்லி அணிக்கு மயாங்க் அகர்வால், ஸ்ரேயாஷ் ஜோடி சிறப்பான தொடக்கம் தந்தது.

ஆரம்பத்திலே அதிரடியை தொடர்ந்த அகர்வால் 21 பந்துகளில் 37 ஓட்டங்கள் (6 பவுண்டரி, 1 சிக்சர்) எடுத்து ஆட்டமிழந்தார். பொறுமையாக விளையாடி வந்த ஸ்ரேயாஷ் அதிரடி காட்டினார். அவர் 30 பந்துகளில் 40 ஓட்டங்கள் (3 பவுண்டரி, 3 சிக்சர்) குவித்து அவுட் ஆனார்.

அடுத்து வந்த அதிரடி வீரர் யுவராஜ் 2 சிக்சர் அடித்த நிலையில் 17 பந்துகளுக்கு 27 ஓட்டங்கள் எடுத்தார். பின்னர் களமிறங்கிய மத்யூஸ் 14 பந்துகளில் 27 ஓட்டங்கள் (3 பவுண்டரி, 1 சிக்சர்) குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இவருடன் டுமினி 44 ஓட்டங்கள் (3 சிக்சர்) குவித்து களத்தில் இருந்தார். டில்லி அணி 20 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட் இழப்பிற்கு 184 ஓட்டங்களை குவித்தது.

### கொடிகாமத்தில்...

டத்தில் முச்சக்கரவண்டி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தவேளை யாழிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்ட ஹயஸ் வான் வேகக்கட்டுப்பாட்டை இழந்து முச்சக்கர வண்டியுடன் மோதியது.

இதன்போது மூன்று பிள்ளைகளின் தந்தையான முத்துவேல் அகிலேஸ்வரன் (வயது - 33) என்பவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார். இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக சாவகச்சேரி மருத்துவ மனையில் வைக்கப்பட்டுள்ளதோடு ஹயஸ் வானின் சாரதியை கொடிகாமம் பொலிஸார் கைது செய்து மேலதிக விசாரணைகளையும் நடத்தி வருகின்றனர். (18)

### ஆணைக்குழு மீது

சந்தித்த அவர், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா ஆகிய இடங்களுக்கும் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டிருந்தார். அவர் தனது பயணத்தின் போதான அவதானிப்புகள் குறித்து நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர், இலங்கையில் விசாரணை ஆணைக்குழுக்கள் குறித்து நம்பிக்கை இடைவெளி உள்ளது. சில ஆணைக்குழுக்கள் பரந்தளவிலான பரிந்துரைகளுடன் பயனுள்ள அறிக்கைகளை வெளியிட்டுள்ளன. வேறு சில அறிக்கைகள் பகிரங்கப்படுத்தப்படவில்லை.

போதுமான பரிந்துரைகளைச் செய்வதில் அல்லது செயற்படுத்துவதில் தோல்வி கண்டுள்ளன. பாதிக்கப்பட்டோரின் உண்மை, நீதி, பரிகாரம், மீண்டும் ஏற்படாதென்ற உத்தரவாதம், ஆகிய உரிமைகளைப் பாதுகாக்கத் தவறியுள்ளதால், ஆணைக்குழுக்களின் மீது அவநம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

நல்லிணக்கத்துக்கு குறுக்கு வழிகள் இல்லை. மீறல்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றை மறந்து விடும்படி நாம் சாதாரணமாக எதிர்பார்க்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### குடிநீரில்...

இந்தக் கலந்துரையாடலில், வடமாகாண ஆளுநர் பளிகக்கார மற்றும் வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் மற்றும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மற்றும் வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மற்றும் நிபுணர் குழுவினர், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் மற்றும் கோப்பாய் தொல்லிப்பளை ஆகிய பிரதேச செயலர்கள் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே வடமாகாண முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சுன்னாகம் கிணற்று நீரில் கைதரோ காபன் இன்றி எண்ணெய் தன்மை காணப்படுகின்றதனால், அனைத்தினையும் ஒரே விதமாக பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

பலவிதமான மாசுகள் நீரில் காணப்படுகின்றன. அங்கு ஒன்றும் இல்லை எனக்கூற முடியாது, வடமாகாண சபையின் நிபுணர் குழுவின் இறுதி அறிக்கை இந்த மாத இறுதிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன் பின்னர் ஏனைய நிபுணர் குழுக்களின் கருத்துக்களையும் கேட்பதற்கு தயாராக இருக்கின்றோம்.

வடமாகாணத்தில் இருக்கும் நீர் நிலைகளை பயன்படுத்துவது சம்பந்தமாக, எப்படியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென வடமாகாண சபையின் நிபுணர் குழு தெரிவிக்க வேண்டும் என்பதனையும் வலியுறுத்தியதாக வடமாகாண முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (25)

### றிசாத்...

றிசாத் பதியுதீன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களின் அபிவிருத்தி இணைப்புக் குழுவின் இணைத் தலைவராகவே அமைச்சர் றிசாத் பதியுதீன் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

மாவட்டங்களின் அபிவிருத்திக்கான திட்டங்களை வகுத்தல், அரசாங்கத்தினாலும், அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் இந்த மூன்று மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களை ஒழுங்குபடுத்தல், அவதானித்தல், மற்றும் பணிகளுக்கான அனுமதியினை வழங்கல் என்பன இந்த தலைமைத்துவத்தின் பணிகளாகும் என ஜனாதிபதி வழங்கியுள்ள இந்த நியமனக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் றிசாத் பதியுதீன் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அறிவித்தல் கடிதங்கள் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் கிராமங்களினதும், பிரதேசங்களினதும் தேவைப்பாடுகள், அவற்றை நடைமுறைக்கு கொண்டு வருவதற்கான ஆலோசனைகள் மற்றும் திட்டங்கள் மாவட்ட அபிவிருத்திக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னரே உரிய அமைச்சுக்களுக்கும், நிறுவனங்களுக்கும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்படும். அந்த வகையில் ஏப்ரல் 2 ஆம் திகதி முதல் அமைச்சர் றிசாத் பதியுதீனை மீண்டும் ஜனாதிபதி மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்களுக்கான தலைவராக ஜனாதிபதி நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (165)


### தேனிலவு...

குறுதிகளையும் நிறைவேற்ற நேர்மையாகவும், உண்மையாகவும் செயற்படாமல், அப்பிரச்சினைகளை தீராப் பிரச்சினைகளாக்கி, மீண்டும் அடுத்த தேர்தலுக்கான மூலதனமாக அதே பிரச்சினைகளை மக்கள் முன்கொண்டு செல்வதையே வழக்கமாக்கிக் கொண்டுள்ளனர்.

கடந்த மாதம் 30ஆம் திகதி வடக்கு மாகாண பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கும் நிகழ்வில் உரையாற்றிய முதலமைச்சர் விக்னேஸ்வரன், உரிமைகள், அதிகாரங்கள் எம்மை நோக்கி வருகின்றன எனக் கூறி, இரண்டு நாட்களுக்குள் அதாவது, இம்மாதம் முதலாம் திகதி ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் பாப்லோடி கிரீவ் உடனான சந்திப்பின் போது, மாகாண அரசின் அதிகாரங்களை மத்திய அரசு கட்டுப்படுத்தும் விதத்தில் செயற்படுவதாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இப்படியே நாளுக்கு நாள் முரண்பாடான வகையில் கருத்துக்களைப் பரப்பிக்கொண்டே தங்களது காலத்தைக் கடத்துவதைத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செய்துவருகின்றனர். இது தான் அவர்களது வரலாறு என செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# குடிநீரில் அரசியல் கலப்பு; கூட்டமைப்பின் பேச்சுக்கு கண்டனம்



சுன்னாகம் நிலத்தடி நீர் விவகாரம் தொடர்பில் அக்கறையற்ற போக்கினைக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், தற்போது இந்த விவகாரத்தில் அரசியல் கலந்திருப்பதாகக் கூறி, மக்களை ஏமாற்றப் பார்க்கிறது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற யாழ். சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த அவர், சுன்னாகம நிலத்தடி நீர் தொடர்பில் நான் ஏற்கனவே உடுவில் பிரதேச செயலர் தலைமையில் துறைசார் குழுவொன்றை அமைத்து, ஆய்வு நடாத்தி அதன் ஊடாக அந் நீரில் கழிவு எண்ணெய் படிமங்கள் இருப்பதாகக் கண்டறிந்த பின்னர், இரு அமைச்சரவைப் பத்திரங்களைத் தாக்கல் செய்து, இப்பகுதியை நீருக்கு பாதுகாப்பற்ற பகுதியாக பிரகடனப்படுத்தும் படியும, உயர் மட்ட அமைச்சரவைக் குழுவொன்று அமைக்கப்பட்டு ஆய்வுகள் தொடரப்பட வேண்டுமெனவும் இதற்கு மேலதிக நிதி ஒதுக்கப்பட வேண்டுமெனவும், உரிய அதிகாரிகளுக்கு இவ்விடயம் குறித்து அறிவிக்கப்பட வேண்டுமெனவும் அதுவரையில் மாற்று வழிமுறைகளினூடாக இப் பகுதி மக்களுக்கு நீர் வழங்கும் ஏற்பாடுகள் வேண்டும் எனவும் கோரியிருந்தேன்.

பின்னர் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்டது. இதனிடையே, வடக்கு மாகாண சபை ஒரு நிபுணர் குழுவை நியமித்ததாகவும், அதன் அறிக்கையில் மேற்படி நிலத்தடி நீரில் உடலுக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய மாசுக்கள் இல்லையென கண்டறியப்பட்டதாகவும் ஊடகங்களில் செய்திகளை வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், எமது மக்கள் மத்தியில் குழப்ப நிலையை உருவாக்கிவிட்டனர்.


மேற்படி விடயம் தொடர்பாக நான் கடந்த 10ஆம் திகதி நாடாளுமன்றத்தில் கேள்வியெழுப்பியபோது, நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர், சுன்னாகம் பகுதி நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் கலப்பு இருப்பது தாங்கள் மேற்கொண்ட ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ள தாகவும், இந்த நீரை மக்கள் பயன்படுத்தக் கூடாது என்றும், மாகாண சபையின் நிபுணர் குழு அறிக்கையை தான் கேட்டதாகவும், அது இதுவரை யில் தனக்குத் தரப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே யாழ். மருத்துவ சங்கத்தினர் மேற்கொண்ட ஆய்வின் பிரகாரம், இந்நீரில் ஈயம கலந்திருப்பதாகவும், இதனைப் பயன்படுத்தினால் எதிர்காலத்தில் நோய்கள் ஏற்படக்கூடும் என்று கூறப்பட்டது.

அதேநேரம், கடந்த 9ஆம் திகதி கொழும்பு, வெள்ளவத்தை, தமிழ்ச் சங்கத்தில் கூடிய தமிழ் சட்டத்தரணிகள் சங்கமும், சுன்னா கம் நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் கலப்பு பற்றி வலியுறுத்தியுள்ளதுடன், இவ்விடயத்தில் வட மாகாண சபையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் மௌனம் சாதிப்பதாகவும் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

எனவே, தவறான தகவல்களை தங்கள் சுய விளம்பரத்திற்காக பத்திரிகைச் செய்திகளாக வழங்கி, எமது மக்களை குழப்பத்தில் ஆழ்த்திவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், தாங்கள் பெற்ற எமது மக்களின் வாக்குகளுக்காவது அம்மக்களுக்கு நம்பிக்கையானவர்களாக நடந்துகொள்ள முன்வரவேண்டுமென செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# வருவாரா ஒபாமா காத்திருக்கிறது கொழும்பு



(கொழும்பு)

அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி இலங்கைக்கு விரைவில் பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில், அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவும் கூட, இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் வாய்ப்புகள் இருப்பதாக, வொஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதரகம், இலங்கை வெளிவிவகார அமைச்சுக்குத் தகவல் அனுப்பியுள்ளது.

இதுகுறித்து தகவல் வெளியிட்டுள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர,

அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி, கூடிய விரைவில் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ள வாய்ப்புள்ளதாக, வொஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் தகவல் அனுப்பியுள்ளது.

மேலதிகமாக, அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா கூட இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வதற்கு வாய்ப்புகள் உள்ளதாகவும், சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்குக் காரணம் கடந்த ஜனவரி மாதம் நடந்த ஜனாதிபதித் தேர்தலை அடுத்து ஏற்பட்ட ஆட்சிமாற்றம் மட்டுமல்ல.

அரசியலமைப்பு மாற்றங்களுடன் ஜனநாயகம் திரும்பியமை, நல்லாட்சி, திட்டமிடப்பட்ட நாடாளுமன்றத் தேர்தல்கள் ஆகியன, அமெரிக்க உயர் பிரமுகர்களின் இலங்கைக்கான பயணங்களை ஊக்குவிப்பதில் முக்கியமான பங்களிப்பைச் செய்துள்ளன. என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# இலவச "வைபை" பயன்பாடு யாழில் நாட்டம் குறைவு




பொது இடங்களில் இலவசமாக வழங்கப்படுகின்ற WiFi வசதிகளை யாழ்ப்பாணத்தில் 50 வரையானோர் பயன்படுத்தியுள்ளனர் என்று இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவர் நிலையம் குறிப்பிட்டுள்ளது. நாடு முழுவதும் 26 பொது இடங்களில் WiFi சேவை இலவசமாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நாடு முழுவதும் இதுவரை 1693 பேர் இச் சேவையை பயன்படுத்தியுள்ளனர்.

இதன்படி, கொழும்பு மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையானோர் இலவச WiFi சேவையைப் பயன்படுத்தியுள்ளனர் என்பது பதிவாகியுள்ளதாக இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி முகுந்தன் கனகே குறிப்பிட்டார்.

யாழ். நூலகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள WiFi வலயத்தின் ஊடாக 50 வரையானோர் சேவையைப் பெற்றுக்கொண்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். அடுத்த சில மாதங்களில் நாடு முழுவதும் 1000 இடங்களில் இலவச WiFi வசதிகளை ஸ்தாபிக்க திட்டமிடப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோவில் உடைத்து திருட்டு

கப்பூது நுழுப்பாவனையில் அமைந்துள்ள கந்தசுவாமி கோவில நேற்று முன்தினம் இரவு திருடர்கள் புகுந்து கோயிலில் உள்ள பொருட்களை திருடியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இரவுப் பூசையினை கோவிலில் முடித்துக்கொண்டு குருக்கள் வீடு சென்ற பின்னர் அங்குள்ள மடப்பள்ளி, களஞ்சிய அறை ஆகியவற்றை உடைத்த திருடர்கள் கோவிலின் குத்து விளக்கு, அலுமினியப் பாத்திரங்கள் என பல பொருட்களை சூறையாடியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் ஆலய பரிபாலன சபையினர் நெல்லியடி பொலிஸாரிடம் முறைப்பாடு ஒன்றினை பதிவு செய்துள்ளதோடு இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் (18)

# இலங்கை–சீனா இடையே மறைமுக நிகழ்ச்சி நிரல் இல்லை

## இலங்கைக்கான சீன பிரதித் தூதுவர் தகவல்



(கொழும்பு)

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் எந்த மறைமுகமான நிகழ்ச்சி நிரலும் கிடையாது என்று, இலங்கைக்கான சீனாவின் பிரதித் தூதுவர் ரென் பகியாங் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், இலங்கையில் சீனாவினால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் பல இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இலங்கைக்கு உதவும் நோக்கம மட்டும் சீனாவுக்கு இருந்தது.

ஆனால், சில சீனத் திட்டங்களுக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் சீனாவின் நன்மதிப்பைக் கெடுக்கும் வகையில் அமைந்துள்ளன.

துறைமுக நகரத் திட்ட பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள முடியாவிட்டால், இரு தரப்புக்கும் ஒரு சட்ட ரீதியான உடன்பாடு உள்ளது என்ற வகையில், நீதிமன்றத்தில் சென்று தீர்த்துக் கொள்ள வேண்டும்.

அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

இலங்கையின் முன்னாள் ஆட்சியாளர் மகிந்த ராஜபக்ஷவுக்கும், அவரது அரசாங்கத்துக்கும் சீனா நெருக்கமான நண்பராக இருந்தது என்று அண்மைக்காலமாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை.

இலங்கையின் நண்பனே சீனா. யார் ஆட்சியில் இருக்கிறார்களோ, அவர்களுக்கு நாம் சாத்தியமான வகையில் உதவு கிறோம்.

போர் முடிவுக்கு வந்த பின்னர், இலங்கையை மீளக் கட்டியெழுப்ப நாம் உதவினோம்.

அப்போது மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருந்தார். அவரைத் தெரிவு செய்தது இலங்கை மக்களே. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோ அதிகாரத்தில் இருந்திருந்தாலும் கூட சீனா உதவி செய்திருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஒட்டுசுட்டான் வீதியில் யானைகளின் தொல்லை



மாங்குளம்-ஒட்டுசுட்டான் வீதியில் பட்டப்பகலில் யானை நடமாடுவதால் அவ்வீதியால் போக்குவரத்துச் செய்வோர் பயப்பீதியுடனேயே செல்லவேண்டியுள்ளது.

குறித்த வீதியில் மக்கள் குடியிருப்புக்கு அண்மையாக காட்டுப்பகுதியில் நேற்று யானை நடமாடியுள்ளது. இதனை பலர் வேடிக்கையாக பார்த்துச்சென்றனர்.

எனினும் சைக்கிள், முச்சக்கரவண்டிகளில் செல்வோர் பயப்பீதியுடனேயே சென்றனர்.

அண்மைக்காலமாக வன்னிப்பகுதிகளில் காட்டு யானைகள் பயன்தருமரங்களை சேதப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மீன்பிடித்துக்கொண்டிருந்தவர் மயங்கி விழுந்து மரணம்

## பள்ளிக்குடா கடலில் துயரம்

பூநகரி - பள்ளிக்குடாவில் இழுவை வலை பயன்படுத்தி கடற்கரையில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர் மயங்கி விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் யாழ். குருநகரைச் சேர்ந்த அகஸ்ரின் அந்தோனிப்பிள்ளை என்பவரே உயிரிழந்துள்ளார்.

பள்ளிக் குடாக் கடற்கரையில் சுமார் 3 அடி ஆழத்தில் நின்று மீன்பிடியில் ஈடுபட்டிருந்த போது. தனக்கு இயலாமலுள்ளதாகச் சக தொழிலாளர்களுக்குக் கூறியுள்ளார்.

இதனால் மீன்பிடியில் ஈடுபட வேண்டாம் என சக தொழிலாளர்கள் கூறியதனையடுத்து அவர் வலை இழுக்காது நின்றுள்ளார். சிறிது நேரத்தின் பின்னர், அவர் எந்த உணர்வுமின்றிக் கடலில் மிதந்துள்ளார் என சக தொழிலாளர்கள் விசாரணையில தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையின் உடற்கூற்றுப் பரிசோதனைக்குப் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஏப்ரல் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.